1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS JAFFNA
phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 14-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### நம்பத்திரிகை

பரிசுத்த வாரத்தையிட்டு வழமைபோல நம்பத்திரிகை அடுத்த 15-ந் திகதி வியாழக்கிழமை வெளிவரமாட்டாது. 22-ந்திகதி வியாழக்கிழமையே வெளிவரும்.

### நமது அச்சியந்திரசாலை

பரிசுத்தவாரத்தையிட்டு இம்மாதம் 14-ந்திகதி புதன்கிழமை மத்தியானந் தொடக்கம் 19-ந் திகதி திங்கட்கிழமை முடிகிறவரையிலே நமதுஅச்சியந்திரசாலை பூட்டப்பட்டிருக்கும். 20-ந் திகதி செவ்வாய்க்கிழமையே மறுபடி வேலைஆரம்பமாகும்.

### கல்லூரி விடுமுறை

சம்பத்திரிசியார் கல்லூரியின் ஈஸ்றர் விடுமுறை சென்ற 6-ந்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாயிற்று. அடுத்த வைகாசிமாதம் 6-ந்திகதியன்று மறுபடி கல்லூரி ஆரம்பமாகும்.

### எலிசபேத் மகாராணியார்

மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியாரும், அவர்நாயகரான எடின்பறோகோமகனும் இம்மாதம் 1-ந் திகதியன்று தங்கள்ஆஸ்திறேலிய சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு பிறிமான்ரில் துறைமுகத்திலிருந்து 'கோதிக்'என்ற கப்பலிலே கொக்கோஸ்தீவுகள்வழியாக இலங்கையை நோக்கிப் புறப்பட் டிருக்கின்றார்கள். "கோதிக்" என்றகப்பல் பிறிமான்ரில் துறைமுகத்திலிருந்து கொக்கோஸ் தீவுகளுக்கும், இலங்கைக்குமாகத் தனது 1,500 மைல்தூரப் பிரயாணத்தைத் தொடங்கியபோது, "சீக்கிரம் திரும்பவாருங்கள்" என்று ஆஸ்திறேலியமக்கள் ஆனந்தக்கூச்சல்கள், கண்ணீர்களுடன் எலிசபேத்மகாராணியாருக்கும், எடின்பறோகோமகனுக்கும் பிரியாவிடைகூறி நின்றார்கள்.

### புதிய பத்துச்சதமுத்திரை

எலிசபேத்மகாராணியார் இலங்கைக்கு விஜயஞ்செய்வதன் ஞாபகார்த்தமாக அவர் கொழும்புவந்துசேரும் தினமாகிய இம்மாதம் 10-ந் திகதியன்று கவர்ச்சிகரமான நீலவர்ணப் புதியபத்துச்சத தபால்முத்திரை எல்லாத்தபாற்கந்தோர்களிலும பாவனைக்குவரவிருக்கிறது. மகாராணியார் இராசபெராஹரையைப் பார்க்கும்காட்சி இதில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. கண்டிப்பிரதானிகள் முன்செல்ல, அலங்கரித்த யானைகள் மளிகாவையை நோக்கிச் செல்வதையும், பின்புறமாகச் சனக்கூட்டம்நின்று காட்சிபார்ப்பதையும் இது பிரதிபலிக்கின்றது. இந்தப்புதிய தபால்முத்திரைகள் விற்பனவாகிறவரையிலே தற்போது பாவனையிலிருந்துவரும் பத்துச்சதத் தபால்முத்திரைகளின் விற்பனவு நிறுத்திவைக்கப்படும்.

### வண. லோங்சுவாமியார்

சம்பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள்அதிபரான வண. ரி. ஏம. எவ். லோங்சுவாமியவர்கள் இன்றுதினம் கொழும்பிலிருந்து ஆஸ்திறேலியாவுக்குப் பயணமாகின்றார். சம்பத்திரிசியார் கல்லூரிப் பழையமாணவர்களின் கொழும்புக்கிளைச்சங்கமானது சென்ற சனிக்கிழமை கிறுண்ட் ஒறியென்ரல் ஹொட்ரலிலே சுவாமியவர்களுக்குச் சம்பிரமமான ஓர்பிரியாவிடைவிருந்து நடத்தியது. அதற்குப்பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல, நீதியரசர் நாகலிங்கம், சேர் சிற்றம்பலம் காடினர் முதலாம் பிரமுகர்கள்பலரும் சமுகமளித்திருந்தார்கள்.

### அரசாங்கமும் கல்விச்செலவும்

தெகிவலைப் பிறெஸ்பிற்றேறியன் பெண்கள்பாடசாலைப் பரிசளிப்புவிழாவிலே வித்தியாதிபதி திரு. ரி. டி. ஜயசூரியஅவர்கள் பேசியபோது: இப்போது அரசாங்கம் கல்விக்கெனப் 15 கோடியே 65 லட்சம்ரூபா செலவிடுகின்றது; இதில் நூற்றுக்கு 75 விகிதமும் ஆசிரியர்களின்சம்பளமும், அலவன்ஸுமாகக் கொடுபடுகிறது; அரசாங்கத்தின் பணநிலை அதிகம்நன்றாய் இல்லாவிடின் கல்விச்செலவை அது குறைக்கவேண்டிவரலாமெனக் கூறியிருக்கின்றார்.

### பாத்திமாவில் நிகழ்ந்த அற்புதம் தமிழ்ப்பேசும் படம்

போர்த்துக்கல்தேச பாத்திமாபதியில் தேவமாதா மூன்றுபிள்ளைகளுக்குக் காட்சியளித்தபோது நிகழ்ந்த அற்புதசம்பவங்கள்பற்றிய ஆங்கிலம் பேசும் படக்காட்சியைச் சமீபத்திலே நாம்பார்த்திருக்கிறோம். இப்போது அது தமிழ்ப்பேசும்படமாக நாளை நின்றுவரும் 10-ந்திகதிமுதல் யாழ்ப்பாணம் றீகல்தியேற்றரில் காண்பிக்கப் படவிருக்கிறது. அனைவரும கண்டு மகிழ்வார்களாக.

### பிள்ளைகளும் றெயில் திக்கெற்றும்

பிள்ளைகளுக்கு றெயில்திக்கெற்வழங்குவதில் இனிமேல் திக்கெற்கொடுக்கும் உத்தியோகஸ்தர்கள் அதிக கவனஞ் செலுத்தப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று றெயில்வே ஜெனறல்மனேஜர் ஸ்ரேஷன் மாஸ்றர்மாருக்கும், ஸ்ரேஷன்பொறுப்பாளிகளான உத்தியோகஸ்தர்களுக்கும் தெரிவித்திருக்கிறார். பன்னிருவயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு அரைத்திக்கெற் வழங்கப்படுவதாகவும், மூன்றுவயதும், அதற்குமேற்பட்ட வயதுமுள்ளபிள்ளைகள் இலவசமாகப் பிரயாணஞ்செய்ய அனுமதிக்கப்படுவதாகவும், அதனால் அரசாங்கத்துக்கு அதிகவருமான நஷ்டம் ஏற்படுவதாகவும் அவர் முறையிட்டுச்செய்திருக்கின்றார்.

### தபாற்கந்தோர் விடுமுறைநாட்கள்

எலிசபேத்மகாராணியார் இலங்கை வந்துசேருந்தினமாகிய இம்மாதம் 10-ந் திகதி தபாற்கந்தோர் விடுமுறைநாளாகும். சிங்கள-தமிழ் புதுவருடப்பிறப்பாகிய 13-ம், 14-ந் திகதிகளும், பெரியவெள்ளிக்கிழமைபாகிய 16-ந் திகதியும் இம்மாதத்தில்வரும் ஏனைய தபாற்கந்தோர் விடுமுறைநாட்களாகும்.

### நெல்லின் உத்தரவாதவிலை

தற்போது புசல்ஒன்றுக்கு 12 ரூபாவாகஇருந்துவரும் நெல்லின்உத்தரவாதவிலை 1957-ம் ஆண்டு மார்கழி மாதம்வரையிலே தொடர்ந்து இருந்து வருமென்று சென்ற சனிக்கிழமை பையகாலையைச்சேர்ந்த எலாதுவைத் தோட்டத்தில்நடைபெற்ற நாற்றுநடுகைப் போட்டிஒன்றிலே உணவு-கமத்தொழில் மந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் அங்கு சமுகமாயிருந்த கமக்காரருக்கு உறுதிவாக்களித்ததாக உணவு உற்பத்தித்தலைவர் திரு. எம். மாணிக்க இடைக்காடர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

### திரிகோணமலை பஸ்விபத்து

திரிகோணமலையிலிருந்து சென்ற வெள்ளிக்கிழமை இருபெண்களும, சிலபாடசாலைப்பிள்ளைகளும் உட்பட 42 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மாத்தளையை நோக்கிச்சென்ற பஸ் ஒன்று திரிகோணமலையிலிருந்து சுமார் நான்குமைல் தூரத்திலுள்ள ஆண்டான்குளம் எனுமிடத்திலே ஓர் மதவுக்குச்சமீபமாகச் சதக்கலான ஓர் வாய்க்காலில் புரண்டபோது அதிலே சென்றவர்களில் சுலிமான்என்ற புடவைவியாபாரி கொல்லப்பட, ஓர் பெண் உட்பட வேறு எட்டுப்பேர் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

### குடியேறிய 300எக்கர்

முன்னர்காடாய்ப் பரந்துகிடந்த முடிக்குரியகாட்டுநிலத்திலே குடியேற்றிவைக்கப்பட்ட நடுத்தரவகுப்பினர் அங்குஏறக்குறைய முந்நூறுஎக்கர்காணியைக் கமச்செய்கைக் குள்ளாக்கியிருக்கின்றனர். அவர்கள் அதனை ஏக்கர் ஏக்கராகப் பண்படுத்தியதால் தற்சமயம் அது செழித்தவயல்களாகக் காட்சியளிக்கின்றது. குடியேறியவர்களுக்கு இற்றைக்கு மூன்றுவருடங்களின்முன் தலைக்குஐந்துஎக்கர்வீதமும், கிராமவாசிகட்கு மூன்றுஎக்கர்வீதமும் காணிகள் பகிர்ந்துகொடுக்கப்பட்டன. இந்தவயல்களுக்கு மாங்குள றெயில்வேஸ்ரேஷனிலிருந்து சுமார் பதினொருமைல் தூரத்திலுள்ளதும், துணுக்காய்ப்பிரிவிலே திருத்தியமைக்கப்பட்டதுமான மல்லாவிக்குளத்திலிருந்து தண்ணீர்பாய்ச்சப்படுகிறது. நீர்ப்பாசனபகுதியாலே வாய்க்கால்கள் [illegible]கப்பட்டன.

### வாழ்க்கைச்செலவுக் குறைவு

இலங்கையிலே சென்றபங்குனிமாதத்தில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை 99·9ஆகக் குறைந்திருக்கிறது. முந்திய மாசிமாதத்தொகை 100·7. அதனால் 100ரூபாவுக்கும் 300ரூபாவுக்குமிடையில் சம்பளம்பெறுகிறவர்களுக்குக் கொடுபட்டுவரும் படிச்செலவும் 96ரூபா 30சதத்திலிருந்து 92-00 ரூபாவாகக் குறையவிருக்கிறது. ஆனால், அரசாங்க உத்தியோகஸ்தர்களின் படிச்செலவு 94 ரூபா 30 சதமாகவே இருந்துவரும். சென்றமாதத்திலே வாழ்க்கைச்செலவு குறையக்காரணம் தேங்காய், எண்ணெய், ஈரவெங்காயம், மரக்கறிகளின்விலை இறங்கியமைதானும்.

### விசேஷ திருயாத்திரை

சேர்வேய்ப்பகுதிக் கத்தோலிக்க சங்கமானது காணி-காணிஅபிவிர்த்தி மந்திரிகாரியாலயத்தைச்சேர்ந்த உத்தியோகஸ்தர், பணியாளர்சகலருக்கும், அவர்கள்குடும்பத்தினர், சிநேகிதர்களுக்குமாக வகக்கோட்டையிலுள்ள அர்ச். அந்தோனியாரின் திருசேத்திரத்திற்கு ஓர்விசேஷ திருயாத்திரையை ஒழுங்குசெய்திருக்கிறது. இந்த யாத்திரை காணி-காணிஅபிவிர்த்தி மந்திரியாரின்ஆதரவில் நடைபெறவிருக்கிறது. யாத்திரிகர்கள் அடுத்த வைகாசிமாதம் 29-ந்திகதிசனிக்கிழமை காலை8-35மணிக்குக் கோட்டை றெயில்வே ஸ்ரேஷனிலிருந்து விசேஷ யாத்திரைறெயினிலே தங்கள் யாத்திரையைத் தொடக்கவிருக்கிறார்கள்.

### அரிசிப்பங்கீடு நீடிக்கும்

தற்போது இறக்குமதிசெய்வதிலும் மிகப்பெருந்தொகையான அரிசியைப் பர்மாவிலிருந்து நாம் இறக்குமதிசெய்யக் கூடியதாயிருந்தாலும், இப்போது அவ்வாறு இறக்குமதிசெய்யவும், சனங்களுக்கு அதிகம்கூடுதலான பங்கீட்டு அரிசி(கூப்பன் அரிசி) கிடைக்கச்செய்யவும் முடியாதிருக்கிறது; ஏனெனில், அரிசியின்விலையானது சனங்கள் அதனை விலைகொடுத்துவாங்கக் கூடியதாயில்லை; இதுதவிர நமதுவிளைபொருட்களிலிருந்து கிடைக்கும் வருமானம் இந்தநாட்டுக்குத் தேவைப்படும் அரிசி முழுவதையும் இறக்குமதி செய்வதற்கும்போதியதாயில்லையென்று உணவு-கமத்தொழில் மந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவிக்கின்றார். பங்கீட்டுஅரிசி படிஒன்று 55 சதமாக விற்கப்படுவதாலே இவ்வருடம் அரிசிக்குஉதவிமான்யம் அளிப்பதில் அரசாங்கம் 9 கோடியே 50 லட்சம்ரூபா நஷ்டம்அடைகின்றது; நமதுஅரிசிப் பிரச்சினையைத் தீர்ப்பதானது உள்நாட்டுநெற்செய்கையை அதிகரிக்கச் செய்வதிலேயே தங்கியிருக்கிறதென்பதை இதெல்லாம் தெரிவிக்கின்றதென்றும் அவர்கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்செய்த குற்றம்

"ஞானம்"

"அம்மா! அம்மா!" என்று அழைத்துக்கொண்டே வந்தான் என் மகன் மரியதாஸ். அவன்தொனியில் ஏதோ ஆவல் தோன்றியது. அவன் எங்கள் ஒரேமைந்தன். எங்கள் எதிர்காலவாழ்வை விளங்கவைப்பான் என்று நான் எதிர்பார்த்த மைந்தன்.

"ஏன்டா ராஜா! என்னநடந்தது? கணக்கு நன்ருகச் செய்தாயா?" என்று கேட்டேன். அவன் என்னை வந்து அணைத்துக் கொண்டே: "அம்மா, நன்ருகச்செய்தேன்; அதிருக்கட்டும்... அம்மா, என்னைக் குருவுக்கு வருகிருயா?" என்று ஞானஉபதேசம் படிப்பிக்கிற சுவாமிகேட்டார் அம்மா.

"நான் இடைமறித்து நீ என்னசொன்ஞய்" என்று கேட்டேன் பதட்டத்துடன். ஏனெனில், என்மகன் படிப்பில் மிகவும்கெட்டிக்காரன். அவன் வேதகடமைகளைச் சரிவர அனுசரிக்கும்படி கவனித்துவந்தோம். அவன் தேவபக்தியுடையவஞய் வளர்ந்துவந்தான். அவனை நன்குபடிக்கவைத்துப் பெரிய உத்தியோகத்தில் அமர்த்த வேண்டுமென ஆவல்கொண்டிருந்தேன்.

"நான் குருவுக்கு வருகிறேன்; இன்றைக்கே அம்மாவிடம் கேட்டுவிடுகிறேன்" என்றுசொல்லிவிட்டு வந்தேன். "அம்மா, நான் குருவுக்குப் போகட்டுமா?" என்று அவன்சொன்னதும் என் தலைசுழன்றது. என் மனக்கோட்டையெல்லாம் இடிந்துவிழுவது போல் தோன்றியது. இதை நான் வெளிக்காட்டிக்கொள்ளாது: "சுவாமி, பகிடிக்குக் கேட்டிருக்கிருரடா! உன்னைச் சேர்க்கமாட்டார்கள்; நீயும் போயிட்டா எனக்குத் துணையார்?" என்றேன்.

"அப்பா இருக்கிருர்தானே?" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். பின்பு விளையாட ஓடிவிட்டான்.

ஆனுல், என்மகனின் பண்பட்ட இதயத்தில் குருவாளவர் போட்டவிதை முளைக்கத்தொடங்கியது. சதா இதைப் பற்றியே அலட்டிக்கொண்டிருந்தான். எங்கே அவன் எனது மனக்கோட்டையையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கி விடுகிருஞே என்ற பீதியினுல் குருத்துவத்தை ஓர்பயங்கர உருவிற் கற்பனைசெய்து என்மகனுக்கு உபதேசித்துவிட்டேன். இவ்வண்ணமே அவன் எண்ணத்தை முளையிலேயே சிதைத்துவிட்டேன்.

வருடங்கள்பல உருண்டோடின. மகன் எஸ். எஸ். சி. பரீட்சையிலே (பாஸ்) பண்ணிவிட்டான். அதற்குப் பிறகு மேலேபடிக்க மறுத்துவிட்டான். நான்கொடுத்த செலலந்தான் இதற்குக் காரணம். கிளறிக்கல்சோதனை பாஸ் பண்ணி ஓர்கிளாக்குவேலையில் அமர்ந்தான். அதிலிருந்தாவது அவன் முன்னுக்குவருவானென்று வாளாவிருந்துவிட்டேன். அப்போது என்கணவர் கொடியவியாதியாற் பிடிக்கப்பட்டு மரணமடைந்தார். மரியதாஸ்தான் எனக்கு ஆறுதலாயிருந்தான்.

ஆனுல், வேலையிற்சேர்ந்த சிலமாதங்களின்பின் மரியதாஸின் நடத்தையில் வித்தியாசங்கள் தோன்றின. அவனை ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்கு அனுப்புவதே கடினமாயிருந்தது. காலையில் கந்தோருக்குப் போனவன் மாலை ஆறு அல்லது ஏழு மணியளவில்தான் திரும்பி வருவான்.

ஒருநாள் இரவு எட்டுமணியளவில் மரியதாஸ் தள்ளாடிக்கொண்டே வந்தான். நான் என்னவோ, ஏதோ என்று அவன்கிட்டே ஓடினேன். "என்ன மரியதாஸ்! என்னநடந்தது? ஒருமாதிரியாய் இருக்கிருயே?" என்றேன்.

அவன் "எ...ன்...ன. எனக்கு... ஒன்றும்இல்லை" என்றதும் சாராய மணம் என் நாசியை அடைத்தது. என் தலையில் ஆயிரம்சம்மட்டிகளால் அடிப்பதைப்போல் பிரேமைகொண்டேன். அவனைத் தாங்கியவண்ணம் படுக்கையிற் கொண்டுபோய்விட்டேன். அறையில்மாட்டியிருந்த இருதய நாதரின் படத்தண்டை சென்று: "ஐயோ! என் ஆண்டவரே, நான் இதற்கென்ன செய்ய; என்மகன் இப்படிக் கெட்டுப் போய்விட்டானே; என்னைக் காப்பாற்றும்; என்மகனைக் காப்பாற்றும்" என்று தேம்பித்தேம்பி அழுதேன்.

"முன்பே அவன்கெட்டுப்போய் விடுவான்என்று அறிந்துதானே அவன் இருதயத்தை எனக்குத் தரும்படி கேட்டேன்; அப்போது மறுத்துவிட்டாய்; அதற்கு என்னசெய்பலாம்" என்று என்னைப் பார்த்துச் சொல்லுவதுபோல் இருந்ததுஎனக்கு அந்தத் திருஇருதய ஆண்டவர்படம்.

ஓர்ஆண்டு மறைந்தது. நான் மரியதாஸுக்குச்செய்த உபதேசங்களெல்லாம் கழுதைக்கு உபதேசம்பண்ணியது போலாயிற்று. அவன் அளவுமீறி மதுபானத்தை அருந்தியதால் சயரோகம் அவனைப் பிடித்துக் கொண்டது. இதையறிந்ததும் அழுதேன். அலறினேன். என்ன புண்ணியம்!

* * *

அப்போதுஅவன் மரணப்படுக்கையில் இருந்தான். எத்தனையோ தடவை அவனைப் பாவசங்கீர்த்தனம் செய்யச் சொன்னேன். மறுத்து விட்டான். ஒருநாள் நான் அவனை அணுகி: "தாஸ், உன்உலகவாழ்வு முடியப்போகிறது; என்மனக்கோட்டையெல்லாம் தரைமட்டமாகிவிட்டது; உன்னைப்படைத்த ஆண்டவரைக்கூட நீமறந்துவிட்டாயப்பா! இது என்குற்றந்தான்; பன்னிரண்டுவயதிலே, பக்திவேகத்தில் உன்மனம் பண்பட்டிருக்கும் வேளையிலே என்னிடம்வந்து குருவுக்குச் சேரப்போகிறேன் என்ருயே! இந்த மகாபாவி நானே உன்னை நன்ருகப் படிக்கவைத்துப் பெரியஉத்தியோகத்தில் வைக்கவேண்டும் என்றஆவலினுல் உன்ஆசையை நிராகரித்துவிட்டேன்; நான்அன்று உன்னைக் குருவுக்குவிட்டிருந்தேனென்ருல் இன்று மதுவைஏந்தும கைகளினுல் உன்பரனை ஏந்தியிருப்பாய்! மதுவை ருசிபார்த்து மரத்துப்போன வாயால் அமலனின் திருச்சரீரத்தைப் புசித்து, அரியபிரசங்கங்களை அதேவாயாற் பொழிந்து, அன்பரையும் என்னையும் ஆனந்தசாகரத்தில் அமிழ்த்தியிருப்பாய்; உன்னைப் பிரிவதால் நான் மனமுடையவில்லை; உன்னைநரகத்தில் தள்ளிவிட்டேனே என்றுதான் வருந்துகின்றேன்" என்று அவன்நெஞ்சில் அந்தப்படியே என் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதேன். அவன் கண்களும் கண்ணீர் சொரிந்தன.

"அம்மா! நடந்ததைஎண்ணி இனி வருந்தி என்னபலன்? என்னை இந்த உலகில் உண்டாக்கிய கடவுளின் இருதயத்தைப் புண்படுத்தி விட்டேன்; பத்துமாதம் சுமந்து பத்தியம் கிடந்து பெற்றுவளர்த்த உன்மனதையும் நோகச்செய்துவிட்டேன்; இதற்கெல்லாம் ........அம்மா!" என்று கண்ணீர் வடித்தான்.

* * *

"தாஸ், நான் சுவாமியை அழைத்து வருகிறேன்; பாவசங்கீர்த்தனம் பண்ண ஆயத்தப்படுத்து" என்றேன். சரிஎன்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான் மரியதாஸ்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தூரத்திலிருந்த கோயிலுக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றேன். சுவாமியாரை அழைத்துக் கொண்டுவர அரைமணியாகி விட்டது.

தாஸ்! என்று அழைத்தபடியே குருவானவருக்கு வழிகாட்டிய வண்ணம் மரியதாஸின் அறையில் நுழைந்தேன். அவன் அண்டை அணுகி அவன்கைகளைப் பற்றினேன். அயர்ந்து போய்க் கிடந்தஅவனும் கண்களை விழித்தான்.

சுவாமியார் தனக்குப்பக்கத்தில் நிற்கக்கண்டான். இருகரமெடுத்து அவரை வணங்கினுன். "மகனே, பாவசங்கீர்த்தனம் செய்யமனமா?" என்ருர் சுவாமியார். "ஆம், சுவாமி, அதற்குத்தான் ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கிறேன்" என்று பலவீனமான குரலில் பகர்ந்தான். சுவாமியார் பக்கத்தில் அமர்ந்தார். பாவசங்கீர்த்தனம் கேட்கத்தொடங்கினுர். அப்போது அவனுடைய இளமையின் வாழ்க்கைச்சம்பவம் முழுவதும் படத்திரை போன்று அவனுடைய மனக்கண்முன்பாகக் காட்சியளித்தன.

மரியதாஸ் பாவசங்கீர்த்தன வேளை முழுவதும் பெருமூச்சும், பிரலாபமுமாய் இருந்தது. உள்ளங்கசிந்துருக, கண்ணீர்சொரிந் தழுதபடியே அதைத் தொடக்கிமுடித்தான். மனஅமைதியுடன் திவ்வியநன்மையும் பெற்றுக் கொண்டான். சுவாமியாரும் வழி தவறிக் காணமற்போன ஆடுஒன்றைத் தேடிக் கண்டடைந்து விட்டதாக நினைத்து ஆனந்தங்கொண்டார். கடைசியாகத் தாய்க்கும், மகனுக்கும் ஆறுதலானவார்த்தைகள் கூறிவிட்டுப்போக எழுந்தார். அப்போது மரியதாஸ் அவரைத்தடுத்து: "சுவாமி, என்தாயார் என்னை அப்போது தடுக்காதிருந்தால் இன்று நானும் தங்களைப்போல் ஓர்குருவாகவந்திருப்பேன்; ஆ, அந்தப் பெரும்பாக்கியம்......... அதன்மேல் அவனுல் பேசமுடியவில்லை. களைதீரச் சற்றுவேளை மவுனமாய் இருந்துவிட்டுத் தனதுதாயைநோக்கிப் பின்வருமாறு கூறினுன்:

"அம்மா, ஒன்றுசொல்லுகிறேன்; குருவுக்குப்போக ஆசையுள்ள பிள்ளைகளை ஒருபோதும் தடுக்கக்கூடாது என்று உலகத்திற்குச் சொல்லுங்கள்; நான் வருகிறேன்அம்மா!" என்று சொன்னதும் அவன் ஆன்மா உடலை விட்டுப் பிரிந்தது.

# தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 4-ம் காரணிக்கம் — 4-ம் பிரியதத்தம்

### 34. காணிக்கைச் சடங்கு

யூதர்கள் சிறைமீண்டு வந்தபோது புதியதேவாலயம்ஒன்றை அமைத்தார்கள்அன்ருே! அவர்கள் அதனைமிகுந்த அழகுடையதாக அமைக்கவிரும்பினுர்கள். அவர்கள் பலவகை அலங்காரங்களைச் செய்தபோதிலும் அது சலமோன்இராசாஅமைத்த முதல்ஆலயத்தின் அழகுசௌந்தரியத்திற்கு இணையாகாததுகண்டு வருந்தி நின்ருர்கள். அப்பொழுது அகேயுஸ்என்ற தீர்க்கதரிசி அவர்களுக்குத் தேறுதலளிக்கும் தீர்க்கதரிசனம்ஒன்றைச் செப்பியருளினுர். அதாவது:

"கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும்ஒருதரம் நான் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன். சகலசாதிகளையும் ஆசையப் பண்ணுவேன். சகல சாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்தஆலயத்தை மகிமையினுல் நிறையப்பண்ணுவேன்என்று சேனைகளின் கர்த்தர் திருவுளம்பற்றுகிருர். வெள்ளியும் என்னுடையது. பொன்னும் என்னுடையதுஎன்று சேனைகளின்கர்த்தர் செப்புகிருர். முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின்கர்த்தர் விளம்புகிருர். இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன்என்று சேனைகளின்கர்த்தர் உரைக்கிருர்" என்பதாம்.

தேவபாலகன் தேவாலயத்திற் பிரவேசித்தபோதே அகேயுஸ்என்பவரின் தீர்க்கதரிசனமும் நிறைவேறலாயிற்று. அதிலேபலரும் அவ்வேளை குழுமியிருக்கிருர்கள். செபஞ்செய்கின்றனர் சிலர். பலிகளை ஒப்புக்கொடுக்கின்றனர்சிலர். வேதப்பிரமாணங்களை ஆராய்கின்றனர் வேறுசிலர். தேவாலயத்தைநோக்கி வருவோரும்போவோருமாக மக்கள் காணப்படுகின்ருர்கள்.

சூசைமாதவனும் தேவதாயும் சாதாரண மக்களைப்போன்று காணிக்கை செலுத்தும் மண்டபத்தில் வந்துசேருகிருர்கள். அவர்களின் காணிக்கைச் சடங்கை நிறைவேற்றிவைக்க ஒரு யூதகுரவர் வருகின்ருர். தேவதாய் தவ்விடபாலகனைக் குரவரின்கரத்தில் வைக்கிருள். அந்தவேளையிலே தேவதாயும் தேவகைத்தாதையும்:

"தேக்கிய புகையும்வாமத்
 தெருட்சியும் மருளின்நோக்கிற்(கு)
ஆக்கிய விருந்தின்விம்ம
 அணிமணிக் கோயில்புக்கு
வீக்கிய துவங்கட்கொன்ரும்
 மெய்யனை வினையின்தீமை
போக்கிய பலியென்ருகப்
 போற்றிவைத்(து) இருவர்நின்ருர்."

நிறைந்த (தேக்கிய) தூபமுதலிய புகைகளும், இரத்தினம்முதலியன செய்த காந்திஒளிகளும் (வாமத் தெருட்சியும்) மயங்கிச்சேர்ந்து கண்ணுக்கினிய விருந்தாகப்பொங்கி (விம்மி) அழகிய மணிக்கோவிலுள் புகுந்து (புக்கு) தேவசுபாவம் மனிதசுபாவமாகிய இரண்டுசுபாவங்களையும் ஒன்ருகச் (துவங்கட்குஒன்ரும்) சேர்த்துக்கட்டிய (வீக்கிய) திருக்குமாரனை (மெய்யனை) பாவவினையின் தீமைபோக்கிய பலியாகப் பரமநாதன் முன்பாக நேர்ந்துவைத்துச் சூசைமாதவனும் திருக்கன்னித்தாயாரும் வணங்கிநிற்கின்ருர்கள்.

பாலகனையே பலிப்பொருளாக அவர்கள் நேர்ந்துகொள்ளுகிருர்கள். உலக இரட்சணியத்திற்காக அவரைக் கையளிக்கிருர்கள். சுதனுகியசருவேசுரன் தமது மாமிசஐக்கியத்தின்போதே தம்மைப் பிதாவாகியசர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார். அதனைப்பிரசித்தமாக ஆலயத்திலேயும் செய்துகொள்ளத் திருவுளமானுர். அவர்சித்தப்படியே அன்னையும், கைத்தாதையும் காணிக்கையாக நேர்ந்துகொள்ளுகிருர்கள்.

அப்போது குரவர் தமதுகையிலேந்திய திவ்வியபாலகனைப் பரமபிதாவுக்குக் காணிக்கைவைக்கும் பாவனையாக உயர்த்திப்பிடிக்கிருர். உடனே தேவதாயாரும், சூசையப்பரும் தங்களிடமிருந்த சிலவெள்ளிக் காசுகளைக் கொடுத்து வாங்கிக்கொள்ளுகிருர்கள்.

இந்தச்சடங்கெல்லாம் ஆலயத்தின் உட்பகுதியிலே நடக்கின்றது. அங்குள்ளமக்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. "இதோநான் என்தூதனை அனுப்புகிறேன்; அவன் எனக்குமுன்பாகப்போய் வழியை ஆயத்தம்பண்ணுவான். அப்பொழுது நீங்கள்தேடுகிற ஆண்டவரும், நீங்கள்விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடையஆலயத்துக்குத் தீவிரமாகவருவார்" என்று மலக்கியாஸ்தீர்க்கதரிசி செப்பியபிரகாரம் ஆண்டவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாக வந்தபோது அவரைக்கண்டடையும் பாக்கியம் அவர்களுக்குக் கிட்டவில்லை. இருவருக்குமாத்திரமே அத்தேவ கடாட்சம் கிட்டுவதாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்துவ ஆகாய விமானி

வடகோறிய கிராமம்ஒன்றிலே அமெரிக்க ஆகாயவிமானி ஒருவர் தமதுசிரசை மரக்குற்றிஒன்றின்மேல்வைத்தபடி முழந்தாட்படியிட்டிருந்தார். அவர் சிரசிற்குமேலாகக் கோடரி ஒன்று ஓங்கியவண்ணம் இருந்தது. அவரைச் சிறைபிடித்த கம்யூனிஸ்தர்கள் அவரைவிழித்து: உன்னுடைய செபமாலையை அசுசிப்படுத்து — அதாவது, அதனைக்கீழே நிலத்திலேவீசிக் காலால்மிதித்து, அதன்மேல் காறித்துப்புஎன்று கட்டளையிட்டார்கள். ஆனல், அவரோ அவ்வாறுசெய்ய மறுத்துவிட்டார். கப்ரின் ஜோண் பிளின் என்ற இந்தஅமெரிக்கவிமானி கடைசியாக உயிர்தப்பிக்கொண்டார். தமக்கு நேர்ந்த சம்பவத்தைலொஞ்ஆஞ்சேல்ஸ் நகரிலே இவர்சமீபத்தில் எடுத்துக்கூறினர். இவர் தங்கள்கட்டளைக்கு இசையப்போவதில்லையென்றுகண்டபோதிலும் அவர் தலைமேல் அவர்கள் கோடரியை இன்னுமே விழவிடவில்லை. அதற்குப்பதில் அவரைக்குரூரமாகவதைத்து, விஷக்கிருமியுத்தத்தில் அவர் கலந்துகொண்டதாக அறிக்கையிடுமாறு செய்யப் பெரிதும்முயன்றார்கள். இதிலும் அவர்கள் வெற்றியடையவில்லை. கப்ரின் பிளின்அவர்கள் வடகோறியாவிலே விமான எதிர்ப்புப்பீரங்கியால் தமது விமானம் சுடப்பட்டபோது, கீழேவிழுந்து கைதுசெய்யப்பட்டார். சிறைமுகாம்ஒன்றுக்குக் கொண்டுசெல்லப்பட்ட ஓர்வாரத்திலும் இவர் வேதசாட்சியாகும் நிலைமையை அண்மியிருந்தார் அப்போது: "நான் சிந்தித்த முதற்காரியம், நான் ஓர் வேதசாட்சியாகப் போகிறேன் என்பதே; பின்னர் எனது குடும்பத்தையும், அவர்களுக்கு நான் எவ்வாறு அவசியந்தேவைப்படுகிறேன் என்பதையும் சிந்தித்தேன்; ஆயினும், கம்யூனிஸ்தர்களின் கேள்விக்கு இசைந்துபோனல் எனது ஆத்துமத்தையே இழந்துபோவேன் என்று நான் நினைத்தேன்" என இவர்கூறுகின்றார்.

## சீனச் சுதந்திர திருச்சபை

"சுதந்திர கத்தோலிக்க திருச்சபை" என்று சீனவிலே ஓர்பிரிவினைச்சபையை ஸ்தாபித்துக் கத்தோலிக்கதிருச்சபையை ஒழித்துவிடக் கம்யூனிஸ்தர் நெடுநாளாக முயற்சித்துவந்தார்கள். ஆனல், இப்போது அவர்கள் "சுதந்திர கத்தோலிக்க திருச்சபை" என்றதைச் "சுவதேசாபிமான திருச்சபை" என்றுமாற்றி அது பரிசுத்தபாப்பரசரை அங்கீகரிக்குமென்று பிரசித்தஞ்செய்திருக்கிறார்கள். சீனக்கம்யூனிஸ்தர்களின் "சுதந்திர திருச்சபை" என்ற பிரிவினைச்சபைஎடுப்புப் பிரதிகூலமானதே இதற்குக் காரணமென்று ஹொங்கோங் தீவிலே விளக்கங்கொடுக்கப்படுகிறது.

## அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளுவார்

அபாயகரமான ஓர் நோயிலிருந்து பதமையாகக் குணமடைந்து வருகிறவரான 12-ம் பத்திநாத பாப்பரசர்தாமே அடுத்த வைகாசிமாதம் 29-ந் திகதியன்று முத். பத்தாம்பத்திநாதபாப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளுவாரென்று "ஒசெர்வாத்தோறே ரோமானோ" எனும் வத்திக்கான் பத்திரிகை அறிவித்திருப்பதாகச் சென்றஞாயிற்றுக்கிழமை வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளுவதானது நிகழும் மரியாயின்புனிதவருடத்து மகாப்பெரும திருவைபவமாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது; "கிராமப் பாப்பானவர்" ஆன பத்தாம்பத்திநாதர் முதலாவது உலகயுத்தம்தொடங்கியசொற்பகாலத்துள் 1914-ம் ஆண்டுபரம பதமடைந்தார்என்றும் அதே தந்திச்சமாச்சாரம் அறிவிக்கின்றது.

## குணமடைந்த பாலியன்

ஸ்பானியதேச ஹூவெல்லா பட்டினத்திலே பாத்திமாநாயகிக்குத்தோத்திரமாகச் சமீபத்தில்நடந்தேறிய பகிரங்க பக்தி அநுசாரம் ஒன்றின்போது, நோயாளரை ஆசீர்வதிக்கும்படியாகத் திவ்வியசற்பிரசாதம் உயர்த்தப்பட்ட சமையத்திலே ஓர்தாய் பெயிற்றோ என்ற தனது சின்னப்புதல்வனைச் சனக்கூட்டத்துக்கு மேலாக உயர்த்தினள். இளம்பிள்ளைவாதங்கண்டுவருந்திய அப்புதல்வனைக் குணப்படுத்துமாறு பாத்திமாஅன்னையை இரந்துமன்றாடினள். அப்போது திடீரெனப் பெயிற்றோஎனும் அப்பாலியன்: "என்னால் நடக்கமுடியும்" என்று நாத்தடக்கூறினன். தாய் சந்தோஷமேலிட்டவளாய் உடனேதானே அவனைக் கீழே இறக்கிவிட்டாள். அவனும் கீழேஇறங்கியதும் எவருடையஉதவியும் இல்லாமலே 400 யாருக்குமேல் துள்ளித்துள்ளி நடந்துசென்றான்.

# பாப்பரசரின் முதற்தரிசனை

பரிசுத்தபிதாவின் வைத்தியரான டக்றர் கலியாலி-லிஸி அவர்கள் "தற்போதுஉண்மையான சுகவிருத்தி அடைந்துவருகிறார்" என்று அறிவித்ததும், இருமாதங்களுக்குமுன்னர் தாம் நோய்வாய்ப் பட்டபின் முதன் முறையாகப் பரிசுத்த பாப்பரசர்சிலதினங்களின் முன் தமது அறையைவிட்டு வெளிகொண்டார். அப்போது சம்பேதுருவானவர் மகாலயமணிகள் ஆர்ப்பரிக்கவே, அவரின் படனசாலை யன்னல் திறக்கப்பட்டு, கீழே சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்தில் சமூகமாயிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின்கண்கள் சிறிதுவேளை அதனையே ஏறெடுத்தவண்ணமிருக்க, தமது வெண்மையான நீண்ட அங்கிக்குமேலாக மேலங்கிஒன்றைத் தரித்தபடியே பாப்பரசர் அங்கு காட்சியளித்தார். தமதுகரங்களை விரித்துக்கொண்டும், தீவிர அபிநயங்களுடன் தமதுகரங்களை மேலும்கீழுமாக அசைத்துக்கொண்டும் தமக்கேவிசேடித்ததான வாழ்த்துடன் யன்னல்முன்பாக அவர்வந்தபோது அந்தப்பெரும் சனக்குழாமின் மத்தியிலே மேகமுழக்கம்போன்று பெரு ஆர்ப்பரிப்பு எழலாயிற்று பரிசுத்தபிதா தொடர்ந்து தமதுகரங்களை ஆட்டிஅசைத்தபின் அவைகளை ஒருங்கே சேர்த்தார். அக்ஷணமே அந்தச்சதுக்கமுழுவதும் பிரமிக்கத்தக்க மௌனம் ஏற்பட்டது. சனக்குழாமுழுவதும் முழந்தாட்படியிட்டு அவரின் ஆசியைப் பெற்றுத் திரும்பவும் ஆர்ப்பரித்தது.

## முத். பத்தாம் பத்திநாதர்

முத். பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம்அருளக் குறிக்கப்பட்டதினமாகிய அடுத்த வைகாசிமாதம் 22-ந்திகதிக்கிடையிலே பரிசுத்த பாப்பரசர் திரும்பவும் நல்லசுகமடையாவிடின் இத்திருவைபவம் நடந்தேறுந்தினம் பின்போடப்படுமென்று திருச்சடங்காசார திருச்சங்கஅதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். இதற்குக்காரணம், அர்ச்சியசிஷ்டர்களின் சாதாரண பஞ்சாங்கத்திலே முத். பத்தாம்பத்திநாதரை இடம்பெறச்செய்வதும், அகிலமுழுவதும் அவரை வணங்கிப் பக்திசெய்வதற்கும், அவர்சலுகையைநாடிச் செபங்கள்செய்வதற்கும்அதிகாரமளிப்பதுமாகிய வழுவாவரப்பிரகடனத்தைப் பரிசுத்தபாப்பரசர் தாமே நேர்முகமாகச் செய்ய வேண்டியிருப்பதேயாகும். என்றாலும் சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்திலே திருப்பட்டவைபவத்திற்கான ஆயத்தங்கள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. அது மிகநீடியதும், பிரயாசமுமானதாய் இருப்பதாலே அதைநிறைவேற்றிவைக்கப் பாப்பரசர் பூரண சுகபலம் அடையவேண்டியவராயிருக்கின்றார்.

## சிறையில் மரணமானர்

சீனவிலே ஓர்சுதந்திர கிறீஸ்துவசபைக்கு — அதாவது நவமாகஆக்கிய பிரிவினைச்சபை ஒன்றுக்குத் தலைமைவகிக்க மறுத்த காரணமாக 1952-ம் ஆண்டு வைகாசிமாதம் கம்யூனிஸ்தர்களால் சிறைவைக்கப்பட்டவரான நான்சாங்நகரின் சோ அதிமேற்றிராணியார் சிறைச்சாலையிலே இறந்துபோயினரெனச் சமீபத்திலே அங்கிருந்து நாடுகடத்தப்பட்டு ஹொங்கோங்தீவுபோய்ச்சேர்ந்த வண. பாச்சின்சுவாமியார் தெரிவித்திருக்கின்றார். சுதந்திரபிரிவினைச்சபையில் சேரும்படியாய்க் கத்தோலிக்கரைப் பலவந்தப்படுத்திக் கடுமையானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும், குருமடங்களிலிருந்து தங்கள்புதல்வர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ளுமாறுபெற்றோர் எச்சரித்துஅச்சுறுத்தப்படுவதாகவும் சுவாமியார்தெரிவித்திருக்கின்றார்.

# அரசர் அரசியுடன் மனந்திரும்பினர்

தேசிய சீனஅரசாங்கத்தின் உறைவிடமாய் இருந்துவருகிற போர்மோசாதீவின் தென்பகுதியிலுள்ள மலைகளிலே சீனர்களுடன் நெருங்கியதொடர்பின்றியே வாழ்ந்துவருகின்ற பழங்குடிகளில் 171பேர் தங்கள் அரசருடனும், அரசியுடனும் மனந்திரும்பி மகாவந். அந்தோனிறிபேறி மேற்றிராணியாரின் கரங்களால் ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்கராகியிருக்கின்றனர். ஞானஸ்நானத்தின்போது புராருயான்என்ற அவர்களின் அரசர் பீற்றர் என்றபெயரும். மல்லூரிஎன்ற அவர்களின்அரசி மேரிறோஸ் என்றபெயரும் தரித்துகொண்டார்கள். ஞானஸ்நானம்பெறுமுன் இந்தப் பழங்குடிகளுக்கு மதமென ஒன்று இருக்கவில்லை. ஆனல், அறுவடைசெய்தபிறகு இவர்கள் சிலதினங்களாக "இயற்கைத் தேவதை"க்கு நன்றிசெலுத்துமுகமாக விழாக்கொண்டாடுவார்கள்.

## பலூன்களிலே சுவிசேஷங்கள்

இருமபுத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளில் வசிக்கும் கோடிக்கணக்கானமக்களுக்குச் சுவிசேஷத்தைக் கொண்டுசெல்லுமாறு ருஷியபாஷையில் அச்சிடப்பெற்ற சுவிசேஷப்பிரதிகளைக்கொண்ட ஐயாயிரம் பலூன்கள் சமீபத்திலே ஜேர்மனியைச்சேர்ந்த ஹொவ்நகருக்குச்சமீபமான ஓர்இடத்திலிருந்து பறக்கவிடப்படலாயின. போலிஷ் பாஷையிலும், செக் பாஷையிலும் அச்சிடப்பெற்ற சுவிசேஷங்களையும் மற்றும்பல்வேறு கத்தோலிக்க பிரசுரங்களையும் கொண்ட வேறும்அநேகாயிரபலூன்கள் விரைவிலே பவேரியாவிலிருந்து அங்குபறக்கவிடப்படவிருக்கின்றன. இந்தப்பலூன்கள் சாதகமான சுவாத்திய நிலைமையிலே 850 மைல்தூரத்துக்குப் பறந்துசெல்லுமாறு விசேஷவிதமாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
பாதுகாவலன்
1954-ம் ஆண்டு
சித்திரை மாதம் 8-ந் திகதி

## எலிசபேத் மகாராணியார்

நமதுசெல்வநாடாகிய ஸ்ரீலங்காவின் புராதனப் பெருமை வாய்ந்த சரித்திரத்திலே பொன்னட்சரங்களால் பொறிக்கப் படத்தகுந்த மற்றுமோர் மகத்தானசம்பவம் இம்மாதம் 10-ந் திகதியாகிய நாளைநின்றுவரும் சனிவாரம் நிகழவிருக்கின்றது. அஃதாவது, மாட்சிமைதங்கிய இரண்டாவது எலிசபேத்மகாராணியார் அன்றுதினம் தமது நாயகரான எடின்பரோகோமகனுடன் எமதுநாட்டுக்கு விஜயஞ்செய்ய விருப்பதேயாம். பிரித்தானிய சாம்பிராச்சியத்துள் அடங்கிய ஓர்நாடாதலின் ஸ்ரீலங்காவின் இராணியாகவே அவர் நம்மத்தியில் வருகின்றார். அதனால் இங்கே அவரைப் பெரிதும்ஆடம்பரமாகவரவேற்பதற்கும், உபசரிப்பதற்குமான பெருமிதஆயத்தங்கள் நடைபெறுகின்றன. பிரித்தானிய ஆட்சிச்சிங்காதனத்தில் அமர்ந்துள்ள மகாராணிஒருவர் நம்துவீபத்துக்கு விஜயஞ்செய்வது இதுவே முதன்முறையாகலின் இதுசரித்திரப்பிரசித்தி பெற்றதொன்றாகும். மிதக்கும்மாளிகை நிகர்த்ததாய் அவர்பிரயாணஞ்செய்யும் "கோதிக்" என்ற கப்பல் அன்றுதினம் அதிகாலை கொழும்புத் துறைமுகத்துள் பிரவேசிக்கும். பின்னர் காலை 9 மணிக்கு அவர் தமது நாயகர்சமேதராய்க் கப்பலிலிருந்து துறைமுகமேடையில் கால்வைத்து நேரே கரையில் இறங்குவார். அதனால் இலங்கைக்கு விஜயஞ்செய்யும் முதல்இராணியார் மாத்திரமல்ல, இங்கே கப்பலிலிருந்து கரையில் நேரே கால்வைத்திறங்கும் முதல்ஆளும இவரே. இம்மாதம் 10-ந்திகதிமுதல் 21-ந் திகதிவரையிலே மகாராணியார் இங்குதங்கியிருக்கும் பன்னிரு தினங்களிலும் அவர் தரிசிக்கவிருக்கும் கொழும்பு, கண்டி, நுவரெலி, பொலன்னறுவை, சிகிரியாமுதலாம் இடங்களிலெல்லாம் ஒவ்வோர்நாளும் பெருநாளாய் இருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. மகாராணியார் பட்டத்துக்குமாரியாய் இருந்தபோது அவர்தமதுநாயகருடன் 1952-ம்ஆண்டு மாசி மாதம் 14-ந்திகதியன்று இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருந்தார். ஆனால், தமது தந்தையாரான ஆறுவதுஜோர்ஜ் அரசரின் எதிர்பாராத சுபமிருத்துக்காரணமாக இடைவழியிற்றனே அவர் லண்டன்நகருக்குத் திரும்பினர். அன்று இளவரசியாக வரவிருந்தஅவர் இன்று அரசியாக வருகின்றார். இலங்கை விஜயம் அரசதம்பதிகளுக்குச் சேமமும், பாக்கியமுமானதாய் இருக்கவேண்டுமென ஆசித்து நாமும் அவர்களுக்கு நல்வரவு கூறுகின்றோம்.

# பரிசுத்த வியாகுலமாதா

— தூ. அ. —

பாவத்தினதும், சாபத்தினதும் மக்களாகிய நம்மைமீட்கப் பரஞ்சோதியானவர் மானிட சட்டைசாத்தித் தமதுசிலுவை மரணத்தினலே மனிதஇரட்சணியத்தை நிறைவேற்றிவைத்த மாபெரும்பரிசுத்தவாரம் இதோ வருகின்றது! அந்தவாரத்திலே நம்திருமீட்பரின் பாடுகளையும், அவருடையவும், நம்முடையவும் தாயாரான வியாகுலமாதாவின் ஆகுலங்களையும் தியானிப்பது உசிதமாகும். சமதுஇரட்சணியத்துக்கு உடன்முயற்சிசெய்து தமதுதிருக்குமாரனுடன் சொல்லொணு வாதைவேதனைகளை அனுபவித்த நம்முடைய தேமதுரத்தாயாரை எந்தவிதமும் நாம் மறக்கஇயலாதன்றோ!

"ஆறும் வெள்ளி" நாளைத் தினம் வருகின்றது. அன்றும, அடுத்த பரிசுத்தவாரத்திலும் "வியாகுல பிரசங்க"த்தையும், "தேவமாதா அம்மானை"யையும் நாம் பக்திஉருக்கமாகப் படித்துச் சிந்தித்தால் கணக்கற்ற ஞானநன்மைகளை அடையலாம். நாம் சுருக்கமாகவரையவேண்டியிருப்பதாலே இருகுறிப்புகளை மாத்திரம் ஈண்டுதருகின்றேம.

### 1. மாதாவின்வியாகுல திருமணித்தியானம்

மாதாவின் வியாகுலங்களைப் பற்றி எந்தநாளுமே ஒரு கால் மணிநேரமாவது தியானஞ்செய்வோமானல், இந்த மாயப்பிரபஞ்சவாழ்விலே நம்மைப்பிடித்து வருத்தும் சகல இக்கட்டு இடைஞ்சல், கஷ்ட நஷ்டம், துன்பம்துயரம், தனிமையாவையும் நாம் தேவசித்தத்துக்குப் பணிந்தமனதுடன் தாங்கி அனுபவிக்க நமக்கு வேண்டிய வரப்பிரசாதங்களை வியாகுலத்தாயார் நமக்குத் தப்பாது பெற்றுக்கொடுப்பார். நம் திருமீட்பர் "துக்கத்தினது மனிதர்." அவருடைய அன்னை "வியாகுல மாதா." மாதா தமதுசீவிய காலத்தில் அமிழ்ந்திய துக்க சமுத்திரத்தின்கரையை எவர்தான் கண்டறிவார்? அதற்கு எல்லையே இல்லை.

"வழிபட்டுப் போகும் மனிதரெனப் போல
வெளிபட்டுப் போகும் விதனமுண்டோ மெல்லியரே!"

மாதாவின்பிரலாபத்தை ஒருவாறேனும் எடுத்து ஓத—

"மண்ணி லுவமை இல்லை,
வானவர்கட்கு வாக்கு மில்லை,
கண்ணி லடங்கு மென்று
கட்டுரைக்கப் பேரு முண்டோ!"

முப்பத்துமூன்று ஆண்டுகளாக மாதாஅனுபவித்த பல்லாயிரம வியாகுலங்கள்அன்றோ இவைகள். சிமியோன்முனிவர் "உமது ஆத்துமத்தையும் ஒருவாள் ஊடுருவும்" என்று செப்பினரோ, அன்றே அவரின் முதலாவது பிரதானவியாகுலம் தொடங்கியது.

தேவதாயாரின் பிரதான வியாகுலங்கள் ஏழு என்பதை நாம்அறிவோம். அந்தவியாகுலங்களை எந்நாளும் ஒரு கால் மணிநேரமாவது தியானிக்கும்படி நமதுசகோதரர்களை வேண்டுகின்றோம். இந்தத்தியானத்தை எத்தனையோ விதமாகச் செய்யலாம். அதிலே ஒருவிதத்தைத்தானும் ஈண்டுமுற்றாய் விபரிக்க இயலாது. ஆகவே, கிழமைக்கு ஒருவியாகுலமாக ஏழு கிழமைகளிலும் அவற்றைச்சிந்திக்கவேண்டுமென்றே நாய்கருதுகின்றோம்.

### 2. உபாதிக்கப்படும் திருச்சபைக்கு மாதாவே என்றும் வெற்றிமுடி சூட்டுபவர்

19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலே ஐரோப்பாவை நடுநடுங்க வைத்த சர்வாதிகாரியான நெப்போலியன்சக்கரவர்த்தி நமது சத்திய திருச்சபையையுமே தனது ஆணையாசக்கரத்துள் அடக்கவேண்டுமென்ற கர்வத்தினல் பித்தலாட்டம் பிடித்தவனய்ப் பாப்பரசின் இராச்சியத்தைக்கவர்ந்து, 1809-ம் ஆண்டு ஏழாம்பத்திநாத பாப்பானவரையும்சிறைப்படுத்தித் தேசாந்திரியாகப் பிராஞ்சுதேசம் கொண்டுசென்றான். ஆனல், ஐந்துஆண்டுகள் முடியாமுன்னரே தேவசாபம் அவன்தலைமேல் இறங்கியது. 1815-ம் ஆண்டு நெப்போலியன் போரிலே முறியடிக்கப்பட்டுச் சத்துராதிகளால் சென்ற் எலெனு என்றதீவிலே சிறைவைக்கப்பட்டான். அத்துடன் பத்திநாதபாப்பானவருமே விடுதலை பெற்றுறோமைநகருக்குத் திரும்பினர். திருச்சபையும் விடுதலை அடைந்தது.

வியாகுலத்தாயாரின் விசேஷ உதவியினலே திருச்சபை அடைந்தவெற்றிக்கு நன்றியறிதலாக, எவ்வருடமும் புரட்டாதி மாதம் 15-ம்திகதியன்று "சேர்வையிற்ஸ்" என்னும் கிறீஸ்துவர்கள்மாத்திரம் கொண்டாடி வந்த வியாகுலமாதாதிருநாளை அகிலஉலகிலுமே சத்தியதிருச்சபை வெகுபக்திவிநயத்துடன் கொண்டாட வேண்டுமெனப் பாப்பானவர் ஆஞ்ஞாபித்தார். ஆகவே, தேவதாயாரின் வியாகுலங்களைப் பக்திசெய்வதற்குப் புரட்டாதியிலும் ஒருதினம் உண்டு. அத்திருநாளின் உட்கருத்துப் பின்வருமாறு:

பரிசுத்தவாரத்துக்கு முன்னும், அந்தவாரத்திலும் மாதாவின் வியாகுலங்களைத் தியானிக்கும்போது, நமது மீட்பரின் கொடியபாடுகளிலே தேவதாயார்பற்றியபங்கையும், அதனல் நமதுஇரட்சணியத்துக்கு அவர் உடன்முயற்சிக்காரியாய் இருந்ததையும தியானிக்கின்றோம். புரட்டாதித்திருநாளன்று திருச்சபை எங்கெங்கு வாதிக்கப்படுகின்றதோ, அங்கங்கெல்லாம் திருச்சபையைத்தேற்றி, அதற்கு ஆறுதலையும், தேறுதலையும் அளித்து ஈற்றிலே வெற்றியையும், விடுதலையையும் அதற்கு அவர் அருளுகின்றார்என்பதை உணருகின்றோம். தமது திருச்சபையின் ஞானச்சரீரம் எங்கு உபத்திரவப்படுத்தப் படுகிறதோ, அங்கு அவர் நிச்சயமாகவே வெகுஅனுதாபத்துடன் அருள்புரிய விசேஷவிதமாகப் பிரசன்னமாயிருக்கிறார் என்பதற்கு ஐயமே இல்லை.

தற்காலம் சத்தியதிருச்சபைக்கு முன்னெருபோதும் இல்லாதவிதமான பயங்கர ஆபத்துநிறைந்தகாலம். நரகக் கூளிகள்எல்லாம் தற்போது உலகில்வந்து சந்நதம்ஆடுமாப்போல் இருக்கிறது. "மௌனத்தில்மாயும் திருச்சபை" மாண்டு போமோஎன்றும் ஓர்வேளை அஞ்சவேண்டியிருக்கிறது. ஆகவே, சர்ப்பத்தின் தலையை நசுக்கினவரை—தமது சத்துராதிகளை என்றுமே சிதறடிப்பவரை — "காணப்பட்ட அணிவகுப்புள்ள வல்லபம்பொருந்திய சேனைகளைப்போல அஞ்சத்தக்கவரை"—இரத்தம்சிந்தாது வேதசாட்சிகட்குக் கிரீடமாயுள்ளவரை இந்தஆபத்துநிறைந்த காலத்திலே அடைக்கலமிரந்து வேண்டிநிற்போமாக இரும்புத்திரைக்கும், மூங்கிற்திரைக்கும்பின்னல கஸ்திவாதை உபத்திரவங்களை அனுபவிக்கும் நமது அரியசகோதரர் விடுதலை பெறும்படியும், திருச்சபையானது எங்கும் சுயாதீனத்தை அடையும்படியும் வியாகுலத்தாயாரை அயராது இரந்துநிற்போமாக.

"வியாகுலம்நிறைந்த மரியாயின் மாசற்றஇருதயமே! உமதுஅடைக்கலத்தை அண்டிநிற்கும் எங்கட்காக வேண்டிக்கொள்ளும்."



## சதாசகாயமாதா கோணம்

### ஒரு பிரியதத்த மந்திரத்தின் சம்பாவனை

(முன்தொடர்ச்சி)

"நான் ஜேர்மனிதேசத்தில் ஒரு தொழிற்சாலைப் பட்டினத்திற்பிறந்தேன். நான்குழந்தையாக இருக்கும்போதே என்தகப்பனர் இறந்துவிட்டார். என் தாயாரைப்பற்றி நல்ல நினைவிருக்கிறது. அவமரிக்கும்போது எனக்குவயதுபன்னிரண்டு. எனக்குஇப்போது வயது 89. என்தாய் சுகதேகியாக இருக்கவில்லை. அவ கொஞ்சக்காலமாக நோயாளியாகவே இருந்தா. இரக்கங்கொண்ட அயலவர்களே அவவைப் பார்த்துவந்தார்கள். ஒரு நாட்காலை அவவுக்கு மிக்கபெலவீனம் காணப்பட்டது. என்னைத்தன்னண்டை கூப்பிட்டு: 'தம்பி பிரான்சிஸ், உன் தாயாகியநான் இதோ சாகப்போகிறேன்; உன்னை ஒப்படைக்கவோ ஒருவரும்இல்லை; உனது தகப்பனும் நானும் அனதைகள்; நீஎனக்கு ஒரு வாக்குக்கொடுத்தாலொழிய நான்சமாதானமாய்ச் சாகமுடியாது' என்ற. அவ என்னகேட்டாலும் அதின்படி செய்ய நான்முழுதுந் தயார்என்று சொன்னேன்.

"சரிநல்லது, இதோசாகக்கிடக்கும் உன்தாயாரைச் சந்தோஷப்படுத்தும்பொருட்டு, நீஎங்கெங்கே இருந்தாலும், நீ இருக்குமட்டும், ஒவ்வொருநாளும் ஒருபிரியதத்தமந்திரம் சொல்லுவதாக எனக்கு வாக்குப்பண்ணு என்றுகேட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் வாக்குக்கொடுத்தேன். அவ என்னைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சினு. 'தேவதாயாரின் பாரமரிப்பில் உன்னை விட்டுச் செல்கிறேன்' என்று. அன்று தானே அவமரித்தா.

"அன்பும், இரக்கமும்பூண்ட அயலவர்ஒருவர் என்னைச்சுவீகரித்துப் பாடசாலைக்குஅனுப்பினுர். எல்லாவகுப்புகளிலும் நான முதலாவது மாணுக்கனுய்த்திகழ்ந்தேன். என் தகப்பனுரின் கீழ் வேலைசெய்தவர்கள் எனது புத்திக்கூர்மையையும், கல்வியின் ஆர்வத்தையும் அவதானித்து ஒருங்குசேர்ந்து, ஒருபணமுடிப்புச் சேகரித்து என்னைப் பெர்லின் சர்வகலாசாலைக்கு அனுப்பிவைத்தார்கள். சர்வகலாசாலையில் நான் ஒருவனே கத்தோலிக்கனுக இருந்தமையால் எனது சமயத்தைப்பற்றி வெட்கப்பட்டேன், திவ்வியபூசைக்குப் போகாது, தேவதிரவிய அனுமானங்களை அடிக்கடி பெறுது விட்டதோடு படிப்படியாகச் செபம்சொல்வதையும் நிற்பாட்டிவிட்டேன். நான் பட்டதாரியானதும் என்னை எல்லோரும் ஒரு வேதவிரோதியெனக் கணித்தார்கள். சர்வகலாசாலையிலே ஓர்பேராசிரியராக நியமிக்கப்பட்டேன். முப்பத்தைந்து வருடங்களாக ஆசிரியகடமைகள் ஆற்றினேன். அந்தக்காலத்தில் நான்செய்யாதபாவம் இல்லையென்று சொல்லலாம். நான் வேதவிரோதியாக மாத்திரமல்ல, தேவதுரோகியாகவும் இருந்ததையிட்டு ஆனந்தங் கொண்டேன். தேவன் பத்துக்கற்பனைகள்அல்ல, ஆயிரங்கற்பனைகள் கொடுத்திருந்தாலும் அவரை அவமதிப்பதற்காக அவைகள் ஒவ்வொன்றையுமே மீறியிருப்பேன்."

சுருக்கடித்த சொக்கையூடே கண்ணீர்வழிந்தோட மீண்டும்சொல்லுவார்: "என்முழுச்சீவியத்திலும், நான்வெட்கப்படாத ஒரேஒருகாரியமுண்டு. என் தாயார் மரிக்கும்போது நான் அவவுக்குக் கொடுத்தவாக்கைக் கடைசிமட்டுங் காப்பாற்றத் தவறவில்லை. விசுவாசமென்பது மருந்துக்குமே இல்லாதிருந்தாலும், வீட்டுக்கு மதுபான வெறியுடன் வந்தால், முதல் முழந்தாளில்இருந்து ஒரு பிரியதத்தமந்திரம் சொல்லாமல் என்னைப் படுக்கைக்குச் செல்லவிடக்கூடாதென எனதுவேலைக்காரனுக்குக் கண்டிப்பான கட்டளையிட்டிருந்தேன். நான் இந்தஊருக்கு வந்தபின் எனதுவிசுவாசம் எனக்குக் கொஞ்சங் கொஞ்சமாகத் திரும்பிவந்தது. எனதுபழையசீவியம் ஒருபயங்கரமான கனுப்போல விருக்கின்றது. எனதுபாவங்கள் இரவும்பகலும் என் மனக்கண்முன் ஊசலாடுகின்றன. தேவதாயார் என்பாவங்கள் மட்டில் உண்மையான மனஸ்தாபம்கொள்ளும்படி எனக்குத்தேவையான வரப்பிரசாதத்தை அடைந்துதந்திருக்கிறு. எண்பத்தேழு வருடங்களாக ஒவ்வொரு நாளும கபிரியேல் சம்மனசானவருடைய மங்களவார்த்தைகளால் நான அவவை வாழ்த்திவந்திருக்கிறேன். அதற்குச்சம்பாவனையாக இன்றுஎன்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்த உங்களை என்னிடம் அனுப்பியிருக்கிறு என்று பூரணமாக நம்புகிறேன்" என்று சொல்லிமுடித்தார்.

வயோதிபர் மிகவுந்தெளிவான பாவசங்கீர்த்தனம்செய்தார். நித்தியத்தைப் பற்றிச சிந்தித்து, தன்ஆத்துமத்தின் மூலைமுடுக்குகளையெல்லாம் சோதித்து, உண்மையாகவே உத்தமமனஸ்தாபப்பட்டு, நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்துகொண்டாரென்று குருவானவருக்குச் சந்தோஷம் ஏற்பட்டது. விரைந்து சென்று கடைசித் தேவநற்கருணை கொண்டுவந்துகொடுத்தார். திருச்சபையின் ஆறுதல்கள்எல்லாம் வழங்கினுர். கிழவனுரின் மரணவஸ்தை நேரம் அவரோடுஇருந்து அவரை மரணத்துக்கு ஆயத்தப்படுத்தினுர். மரணம்அடைந்ததும் அவருடைய கண்களையும் பொத்தினுர். அவரின்பிரேத அடக்கத்தின்போது சேமக்காலையில் குழுமியிருந்த சனத்திரளுக்குக் கோப்றென்பவரின் சீவியவரலாற்றைத் தெரிவித்தார். எல்லோரும் தேவதாயாரின் நன்மைத்தனத்தையும், இரக்கத்தையும் புகழ்ந்தார்கள். மரித்தவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக விசேஷவிதமாக வேண்டிக்கொண்டார்கள்.

"அர்ச். மரியாயே! சருவேசுரனுடையமாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும், எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்."

---

ஸ்பானியதேச ஆரோக்கியசாலை ஒன்றிலே சென்றபங்குனிமாதம் 24-ந் திகதி காலஞ்சென்ற தம்முடைய அருமைச் சகோதரியின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடிக்கொள்ளுமாறு தமது சகோதர குருப்பிரசாதிகளையும், மற்றும் சந்நியாசர், கன்னியாஸ்திரீமார், கிறீஸ்தவர்களையும் அடமபன் கட்டளைக்குருவான வண. ஆர். கொன்சாலெஸ் சுவாமியார் பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்ருர்.

---

# மரியாயின் புனிதவருடப் பொது நிருபம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இன்னும் நித்தியசம்பாவனை மாட்டுள்ள விசுவாசமும், நம்பிக்கையும் தவறுன இந்தப் போதகங்களினுல் இழக்கப்படுமாளுல் மக்கள் தடையின்றியும், பேராசையால் உந்தப்பட்டும் அயலாரின் பொருள்பண்டங்களை உக்கிரமான அபேட்சைகொண்டு கொள்ளைகொள்ளவும், இன்னும் மேலாகத் தருணமோ, வாய்ப்போ ஏற்புறுவேளைகளிலெல்லாம் அவற்றைப்பலவந்தமாகப்பிடுங்கிக் கபளிகரமசெய்யவும் துணிவார்கள்என்பதில் எட்டுணையேனும் சந்தேகமில்லை

இத்தால் மனுமக்களிடையே பகையும், காய்மகாரமும், முரண்பாடும், பெரும்போரும் எழுந்து, சமூக வாழ்வும், தனிவாழ்வும் நிலைகுலையும். அரசாங்கம் கஷ்டப்பட்டுப் பாதுகாத்துக் கண்காணிக்கும் சமூகவாழ்வின் அடிப்படைதானும் மெல்லமெல்ல அடியோடுதகர்த்து நாசமாக்கப்படும். இதன் பேருய்க் கடைசியாகத் தீய காட்சிகள், நடிப்புகள், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதலியவை முளைப்பதோடு,பாவஅக்கிரமங்களினுல் நல்லொழுக்கமுமே உருக்குலையும்.

அரசாங்கத்தின் அதிகாரத்தை வகித்திருப்போர் இவ்விடயத்தில் பெரும் நன்மைகளுக்கு அடிகோலக்கூடும் என்பதுதிண்ணம். என்றுலும், இப்பெருந்தீமைகளை அறவே ஒழித்துக்கட்டுவதற்கு இஃதிலும் மேலான வேர்வழியை — அதாவது மனிதசுபாவத்தையும் கடந்த ஒருஉயர்ந்தவல்லபத்தையே துணையாகநாடுவது உத்தமம். இவ்வல்லபமானது தன்பரலோக பிரபையினுல் உள்ளங்களை ஒளியால் நிரப்பி, தன்தெய்வீகஅருளால் ஆத்துமங்களுள் நுழைந்து அவைகளுக்குப் புத்துயிர்கொடுத்துத் தன் மேலான ஏவல்களால் அவைகளைப் புதுவிதமாகச் சிறப்பிக்கும்.

அப்போதுதான் கிறீஸ்துவநன்னெறி திரும்பவும் உலகமெங்கும் செழித்து வளருமென்று நம்பலாம். சமுதாய வாழ்வுதங்க நிலைக்களனுகும் உண்மை விதிமுறைகள் வலியுறும். அந்நியோன்னியம், நடுநிலைமை, நீதியிலும் அறத்திலும்பிறந்த அன்புகலந்த சங்கை பாராட்டல் ஆதியன சகலவகுப்பாரிடையிலும் நிரந்தரமாகநிலைக்கும். நவமான துன்பங்களைத் தோற்றுவிக்கும் விதைகளை விதைத்து, எப்போதும் உயிர்கள் இரத்தஞ்சிந்தக் காரணமாயிருக்கும் பகைமையும் தணிக்கப்படும். கடைசியாய் உயர்ந்தவகுப்பாருக்கும், தாழ்ந்தவகுப்பாருக்கும் இடையிலுள்ள பிணக்குகள்குறைந்து இருபகுதியாருக்கும் உரியஉரிமைகள் சமாசமாகப்பங்கிடப்படும். மனமொத்த பரஸ்பரஉடன்படிக்கையும், பொதுநன்மைக்கு ஒத்ததும், நிலைபரமுள்ளதுமான நீதிமுறைமையும் நிலவும்.

நாம் பின்பற்றவேண்டுமென்று கடவுளின் கன்னித்தாயார் ஏவித்தூண்டும் கிறீஸ்துவகொள்கைகளை நாம்ஆவலோடும், முழுத்தத்துவத்தோடும் உண்மையாகவே நடைமுறைக்குக் கொண்டுவந்தாற்றுன் சந்தேகமற நிலையான பூரணபலனளிக்கும்.

இதனை உள்ளத்திற்கொண்டே, வந்தனைக்குரியசகோதரரே! நாம் முன் சொன்னமேரையாய் எமதுமுன்னேடியான நீங்காநினைவுக்குரிய பரிசுத்த பிதாவானவர், தேவகன்னித்தாய் முற்றுகவே ஜென்மதோஷக் கறையினின்றும் காப்பாற்றப்பட்டார்என்ற மகிமையிலங்கும் நவமானவைரக்கல்லான சத்தியத்தை முழுக்கிறீஸ்தவர்களினதும் குதூகலவரவேற்புக்கிடையில் பிரகடனஞ்செய்து ஆண்டுகள் நூறு நிறைவாயினவே. இத்தருணத்தில் நீங்கள் வகித்துவரும் இந்தஉன்னதபதவியை முன்னிட்டு உங்கள்ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்வதுயாதெனில், இவ்வருடம் மார்கழித்திங்கள் தொடங்கி அடுத்தவருடம் மார்கழிவரையும் மரியாயின்வருடமாக அனுசரிக்கவேண்டுமென நாம்விதிக்கும் புனிதஆண்டை உலகமெங்கும் வெகுஆடம்பரமாய்க் கொண்டாடும்படி, உங்கள்ஆட்சிக்குட்பட்ட குருமாரையும், விசுவாசிகளையும் ஏவித்தூண்டிவிடும்படி உங்களை வற்புறுத்துகிறேம்.

அன்றியும் இக்கொண்டாட்டமானது நாம்எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் அதிபற்றுதலும், இதமுமான நற்கனிகளைப் பெற்றுத்தருமென நாம்உறுதியாக நம்பியிருக்கிறேம்.

## பத்திவணக்கத்தின் முறைமை

புனிதவருடஏற்பாட்டைக் குறைவற நிறைவேற்ற இலகுவாக்கி, பெரும் வெற்றியையும் பெறவேண்டுமாளுல் ஒவ்வொருமேற்றிராசனத்திலும் இதன் நோக்கமாக இக்கிறீஸ்தவசத்தியத்தை மிகவும்தெளிவாக விளக்கும் பொருத்தமான பிரசங்கங்களும், சொற்பொழிவுகளும் நடாத்தப்பட வேண்டும்என விரும்புகின்றேம். இவைமூலம் மக்களின்விசுவாசம் அதிகரித்துத் தேவகன்னித்தாயாரின்மட்டில் காட்டும் அன்பு தினமும்சுவாலைவிட்டு வளரும். அப்போது உலகத்தோர்எல்லோரும் நம்பரலோக அன்னையின் அடிச்சுவட்டை மனமாரவும், ஊக்கமாகவும் பின்பற்றத் தாமாகவேமுனைந்துநிற்பர்.

அதனுல், கிறீஸ்துசமயம் தழைத்திருக்கும் சகலநகரங்கள், பட்டினங்கள், கிராமங்களிலும் பரிசுத்தகன்னித்தாயார் கிறீஸ்துவமக்களால் வணங்கப்படும் தேவாலயமோ, பீடமோ அமைக்கப்பட்டிருக்கின்றன. வந்தனைக்குரிய சகோதரரே! அவ்விடங்களுக்கு விசுவாசிகள் பெருந்திரளாகத் திரண்டு சென்று எங்கள் மிகவும்இனிய தாயாருக்குத் தனிமுறையிலும், பொதுவாகவும் பிரசித்தபிரார்த்தனைகள் ஏகமனத்தோடு ஏககுரலில் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டுமென ஆசிக்கிறேம்.

ஆதலால், பொதுவாக எல்லாமேற்றிராசனங்களிலும் நடைபெறுவதுபோல் [illegible] கன்னித்தாயாருக்கு எங்கெங்கே ஆலயங்கள்அமைத்து மகா பக்திபற்றுதலோடு தேவஆராதனைகள் நடைபெறுகின்றனவோ ஆங்காங்கே விசேஷநாட்களைக்குறித்து மக்கள் பெருந்தொகையாகத்திரண்டு யாத்திரைசென்று அதிபரிசுத்த கன்னிகையின்மட்டில் தங்களுக்குள்ளஅன்பையும், வணக்கத்தையும் சமூகமாகவும் பிரசித்தமாகவும் காண்பித்து, விசுவாசத்தையும் வெளியரங்கமாக அறிக்கையிட்டு அவருடைய மகிமையைத் துலாம்பரமாக்க வேண்டும்.

பரிசுத்தகன்னிமரியாயின் மாசில்லாத உற்பவத்துக்குக்காட்டும் காந்தலான பக்திபற்றுதலானது அச்சத்தியத்தை விசேஷவிதமாகத்துலக்கும தலமாகிய லூர்துகைபியண்டை அதிவிசேஷ முறைமையில் ஆராதனைகள் நடாத்திக் காட்டப்படும் என்பதில்........

கிறீஸ்துவசகாப்தத்தின் ஆரம்பகாலந்தொட்டே தன்பாதுகாவலாளியான பரலோகதாயாருக்குக் காந்தலானபக்தியைக் காண்பித்துவரும் பரிசுத்தஉரோமைமாநகரம் இவ்வித விசேஷ ஆராதனைகளின் சிறந்தமுன் மாதிரிகைக்கு முதலிடமாக இருக்கட்டும்.

யாவரும்அறிந்தபடி, இங்கு உரோமரின் கதித்தபக்திபற்றுதலைப் புலப்படுத்தத் தேவதாயாரைப் பிரசித்தமாக ஸ்தாபிக்கும் பரிசுத்தஆலயங்கள்பல இருந்தாலும் அவைகளுள்சிறந்தது 'லிபேரியன்' (Liberian Basilica) மகாலயமே. இங்கேயே கன்னிமரியாயின் பரிசுத்ததாய்மையை வெளிப்படுத்தும்சின்னமாக, எங்கள் முன்னேடியானவரின் பேர்போனசித்திரம் ஒன்றுண்டு. அதில் 'உரோமமக்களின் இரட்சணியமாகிய' (Salus Populi Romani) தேவதாயார் கருணைவழியும் புன்முறுவலுடன் காட்சியளித்துக் கொண்டிருக்கிறுர்.

அந்நகரத்தார் விசேஷ விதமாக வேண்டுதல்கள்புரியும் நோக்கத்துடன் அவ்விடத்துக்குத் திரள் திரளாகக் கூடிப்போய்த் தேவஅன்னையின் முன் சென்று உலகிலுள்ள கத்தோலிக்க சமூகத்தின் தலைமைநகரமாகிய உரோமாபுரி விசுவாசத்திலும், பக்தியிலும் சகலருக்கும் வழிகாட்டியாக முன்செல்லும்படி விசேஷசெபங்களும், மன்ருட்டங்களும் ஒப்புக்கொடுப்பார்களாக.

ஏனெனில், உரோமாபுரிமக்களே! நமதுமுன்னேடியான பூசிதஞாபகத்துக்குரிய பரிசுத்தமகாலியோ பாப்பாண்டவரின் வார்த்தைகளைச் சிந்தியுங்கள். அவர்கூறுவதாவது: "அகில உலகத்திலும் பரந்துகிடக்கும் சகல ஆலயங்களுள்ளும் புண்ணியசாங்கோபாங்கம் கதித்துவளரவேண்டியதே. என்றாலும், எங்கள்ஆண்டவரான யேசுக்கிறீஸ்துநாதரால் மற்றவர்களுடன் இரட்சிக்கப்பட்டு அப்போஸ்தலிக்ககோட்டையுள் ஸ்தாபிக்கப்பட்ட உங்களிடத்தில் — அதுவும் பரிசுத்த தலைமைஅப்போஸ்தலரான பேதுருவானவரால் மற்றெவரிலும் அதிகமாகப் போதிக்கப்பட்ட உங்களிடத்தில் எப்படியோ மற்றுங்கிறீஸ்தவர்களிலும் மேலாகச் செயலளவில் புண்ணியசாதனைகள் விசேஷவிதமாகக் காணப்பட வேண்டும்" என்பதாம்.

(தொடரும்)

---

*************************

இலங்கையிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபை மிஷன்களைத் தரிசிக்குமாறு சமீபத்திலே கொழும்பு வந்துசேர்ந்த அச்சபையின் உபஅதிசிரேஷ்டராகிய மகாவண. எஸ். லுக்காஸ் சுவாமிகள் தற்போது யாழ்ப்பாணத்துக்குவிஜயஞ்செய்து மேற்றிராசனமாளிகையிலே தங்கியிருக்கின்ருர்.

*************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது:

**அருமைச் சகோதரங்களே!**

அடுத்து வரும் குருத்து ஞாயிற்றுக் கிழமையுடன் அர்ச்சிய சிஷ்ட வாரம் தொடங்கும். இந்தக் கிழமையை அர்ச்சியசிஷ்ட வாரம் என்று ஏன் சொல்லுகிறோம் தெரியுமா?

ஏனெனில, இந்தக் கிழமையில் யேசுவினது சீவியத்தின் கடைசி நாட்களில் நடந்த துக்க சம்பவங்களையும், அவர் எங்கள் ஈடேற்றத்தை நிறைவேற்றின விதத்தையும் பற்றித் தியானிக் கிறோம்.

உங்கள் பங்குக் கோயில்களில் ஆடம்பரமான அர்த்தம் நிறைந்த திருச் சடங்குகள் நிறைவேறும். அவைகள் யேசுநாதர் நற்கருணையை உண்டாக்கியதையும், அவர் சீஷருடைய கால்களைக் கழுவியதையும், சிலுவையில் அறையுண்டு பாடுபட்டு மரணித்த தையும் தெளிவாகக் காட்டும்.

இரவு கழிந்ததும் சூரியன் உதயமாவது போல, இந்தத் துக்க சம்பவங்களின் பின்னர் யேசு உத்தான மானதையும் தியானிப்பீர்கள்.

இவைகளின் கருத்தை உணர்ந்து பலனுடன் பங்கு பற்றுங் கள்.

சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## திருச் சிலுவை

'ஜெயம்'

I

அன்பு கனிந்த சிலுவைஇது — மகனே!
அருளைப் பொழிந்த சிலுவைஇது
துன்பந் தொலைத்த சிலுவைஇது — மலைமேல்
தூயோன் சுமந்த திருச்சிலுவை

II

பாவந் துடைத்த சிலுவைஇது — மகனே!
பாரம் மிகுந்த சிலுவைஇது
சீவன் கொடுத்த சிலுவைஇது — மரியாள்
செல்வன் துடித்த திருச்சிலுவை

III

உதிரம் வழிந்த சிலுவைஇது — சுதனர்
உள்ளம் பிழிந்த சிலுவைஇது
கதியைத் திறந்த சிலுவைஇது — மகனே!
கர்த்தன் மரித்த திருச்சிலுவை

## மூன்று பொன்னர்கள்

ஒவ்வொரு மனிதனும் மூன்று ஆட்கள்.

பொன்னன் தானே அறிந்த பொன்னன், தன் சிநேகிதர் அறிந்த பொன்னன், கடவுள் அறிந்த பொன்னன்.

* * *

## சகோதர பட்சம்

ஒரு ஊரிலே ஒருதாய்க்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் பெயர் பிரான்சீஸ். இளையவன் பெயர் மரியதாஸ். ஒருநாள் தாய் இருவரையும் அழைத்து முத்தமிட்டு விட்டு அவர்களைநோக்கி: பிள்ளைகளே! நீங்கள் இருவ நம் சகோதரபட்சமாய் வாழவேண்டும்; ஒருவர் பார்த்திருக்க மற்றவர் எதையும் உண்ணப்படாது; ஒருவர் பசியிருக்க மற்றவர் வயிறாரச் சாப்படக்கூடாது; ஒருவருக்குஒருவர் பங்கிட்டுக் கொடுத்துச் சகோதர பட்சம் காட்டி நடக்கவேண்டும் என்று புத்தி கற்பித்தாள். ஒருநாள் பிரான்சீஸ் ஒருவாழைப்பழம் உண்ணும்போது, தம்பி மரியதாஸ் அவனைப்பார்த்து: அண்ணா! பாதிப் பழத்தை எனக்குத் தாருங்கள் என்று கெஞ்சினான் பிரான்சீஸ் இல்லை, தர மாட்டேன் என்றான், அப்போது ஒரு காசுபவந்து பிரான்சீஸின் கையிலிருந்த வாழைப் பழத்தைத் தட்டிப் பறித்துக் கொண்டு பறந்துபோய் விட்டது. அதைப்பார்த்து மரியதாஸ் கைகொட்டிச் சிரித்தான் அண்ணா! எப்படி என்று பரிகாசம் செய்தான்.

பிரான்சீஸ் வெட்கித் தலை குனிந்தான். பாருங்கள்! சகோதரபட்சமாய் நடந்தால் எவ்வளவு நன்மை.

வே. அல்பிறேட்,
சாவகச்சேரி.

## உயிலங்குளம்

மாந்தை தெற்குப் பகுதியின் மத்தியாக மட்டுமல்ல, ஆனால், மாதோட்டம் முழுவதுக்கும் நடுநாயகமான முக்கிய கிராமங்களுள் ஒன்றாகவும் இவ்வூர் திகழுகின்றது. இது மன்னார்-மதவாச்சித் தெருவிலே மன்னாரிலிருந்து 8-ம், 9-ம் மைலுக்கிடையில் இருக்கிறது. இங்குள்ள குளத்தின் திடர்ப் பகுதியிலே அதிகமாக உயில்மரங்கள் காணப்படுவதால் உயில் + குளம் = உயிலங்குளம் எனப் பெயர் வழங்கி வருகின்றது. அதனால் இது காரணப்பெயராகும். இங்கே வசிக்கும் புராதன குடிகளெல்லாம் கத்தோலிக்கர். ஆனால், காலகதியில் இங்குவந்து குடியேறிய அநேக இந்துக்களும், மகமதியரும் இங்கு வசித்துவருகின்றனர். அர்ச். பேதுருவானவர்போரால் கட்டப்பட்டுள்ள ஓர் சிற்றாலயமும், அதனோடு இணைக்கப்பட்டு ஓர் மேல்மாடியைக் கொண்ட சிறந்த குருமனையும், இவற்றின் அண்மையில் கனிஷ்டவகுப்புகளைக் கொண்ட கத்தோலிக்க பாடசாலை ஒன்றும உண்டு. இப்பாடசாலை சுமார் ஐம்பது ஆண்டுகளின்முன் ஆரம்பிக்கப் பட்டது. ஓர் குருவானவர் இங்கே நிலையாக வசித்து வருகிறார்.

கிராமக் கோட்டு வங்களாவும், கிராமச்சங்கக் கட்டடமும், கர்ப்பவதிகள்—சிசுக்களைப் பராமரிக்கும் பரிபாலன சாலையொன்றும், மாந்தை தெற்குப்பகுதி ஐக்கிய சங்க நிலையமும், உழும் யந்திரங்களின் நிலையமும், உபதபால் கந்தோரும், நெல்குத்தும் யந்திரசாலைகளும், நல்ல கடைவீதியும் இங்கே இருக்கின்றன. குளமும், பலகிணறுகளும் இருப்பதால் நீர்வசதி உள்ளதாயும், பெரும் தெருவில் இருப்பதாலும், மாதோட்டப் புகையிரதஸ்தானம் அணமையில் இருப்பதாலும் பஸ், புகையிரதப் பிரயாணவசதி உடையதாயும் இருக்கின்றது. இங்கே ஒரு மருந்துச்சாலையும், பகிரங்கசந்தையும் நிறுவுதல் மிகுந்த பயன் அளிப்பதாகும். இந்தக் கிராமமக்களின் முக்கிய தொழில் கமமுயற்சியே. வருடத்தில் இருமுறை நெற்செய்கை நடைபெறும். மலையாள மக்களால் பெரியகடைகள் முறைபாக நடத்தப்படுகின்றன. கல்மோட்டை என்னும் மிகச் சிறிய கிராமம் இதனோடு தொடர்பு உடையதாய் இருக்கிறது. முதலைக்குத்தி, நொச்சிக்குளம், நீலாசேனை, மணல்குளம், வண்ணமோட்டை என்பன இதன் மிக நெருங்கிய அயற்கிராமங்கள். தினமும் பல கிராமவாசிகள் இங்கேவந்து பொருள்களைக் கொள்வனவு விற்பனவு செய்துவரும் காட்சி மிகமாட்சியாய் இருக்கும்.

— எஸ். ஏ.

## அர்ச்சியசிஷ்டவாரம்

### யேசு ஜெருசலேம்வருதல்

திவ்வியயேசு பரிசுத்த நகரத்திற்கு வருகிறார். அவரைவரவேற்று அழைத்துச் செல்ல அநேக சனங்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் யேசுவைப் போற்றி, ஆனந்தக் கூச்சல் இடுகிறார்கள். ஏனெனில், அவர் தேவன் என்று அவர்கள் அறிவார்கள். அவர் பலகுருடருக்குப் பார்வை அளித்தார். முடவர்களை நடக்கச் செய்தார். இறந்துபோனவர்களுக்கு உயிர் கொடுத்தார். ஆனால், சில சனங்கள் அவரில் பொறாமை கொண்டு அவரை வெறுத்தார்கள். "இவரைக் கொல்லவேண்டும்" என்று சிலர் சதிஆலோசனை கூறினார்கள்.

### கடைசிப் போசனம்

பரிசுத்த நகரிலுள்ள ஓர்வீட்டிற்கு யேசு போனார். அங்கு சீஷருடன் கடைசியாகப் பந்தி அமர்ந்தார். அப்பத்தையும், முந்திரிகை இரசத்தையும் தம்முடைய சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றினார். மாற்றிச் சீஷருக்கு முதல் நற்கருணை கொடுத்தார். அதே வேளையில் சீஷரைக் குருக்கள் ஆக்கினார். அவர்களுக்குப் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கும் தத்துவத்தைக் கொடுத்தார்.

### யேசுவின் பாடுகள்

கடைசி இராப்போசனம் முடிந்த பின் யேசு சீஷருடன் கூட ஒலிவத் தோப்புக்குச் சென்றார். "என்னுடன் கூட இருங்கள்; விழிப்பாய் இருந்து செபஞ் செய்யுங்கள்" என்று யேசு அவர்களுக்குச் சொன்னார். சீஷர்கள் சற்றுநேரம் செபித்தார்கள். களைத்துப்போய் இருந்தபடியால் கண் அயர்ந்து உறங்கினார்கள். அப்பொழுது ஆண்டவரின் எதிரிகள் அத்தோப்புக்கு வந்தனர். சதிகாரயூதாஸ் அவர்களுக்குவழிகாட்டி முன் நடந்து வந்தான். சனசந்தடியைச் சம்பேதுரு கேட்டு விழித்துஎழுந்தார். சண்டை தொடக்க ஆயத்தப் படுத்திய போது யேசு அவரைத் தடுத்தார். தம்மைப் பிடித்துக் கொண்டு போகும்படி யேசு சத்துராதிகளுக்கு அனுமதி கொடுத்தார். ஏனெனில், எங்களுக்காகப் பாடுபட்டு மரணிக்க அவருக்குச் சம்மதம்.

### சிலுவைப்பாதை

ஆண்டவருடைய சத்துராதிகள் அவரை ஆக்கினைப் படுத்தினார்கள். கசைகளால் அடித்தார்கள். கூரிய முள்முடியை அவருடைய தலையில் வைத்து அழுத்தினார்கள். அடுத்த நாள் காலை யேசுவின் தோள்மேல் சிலுவையைச் சுமத்தி அதைச் சுமந்து கொண்டு போகும்படி செய்தார்கள் அந்தக் கொடிய யூதர். அந்தச் சுமையுடன் நடக்க முடியாமல் மூன்று முறை அவர் விழுகிறார். வழியில் தமது தாயாரைச் சந்திக்கிறார். இருவரும் பேசமாட்டாமல் துக்கத்துடன் அழுகின்றனர்.

மெதுவாக ஆண்டவர் கல்வாரிமலை உச்சியைப் போய்ச் சேர்ந்தார். அங்கே அந்தச் சத்துராதியூதர் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்.

### திருமரணம்

சிலுவையில் அறையுண்டிருந்தயேசு அங்கு நின்றவர்களைப் பார்த்தார். சத்துராதிகள் அவரைக் கேலி செய்தார்கள். அவருடைய தாயாரும், சஞ்சுவாமும், மரியமதலேனும் அங்கே நிற்கக்கண்டார். அவர்கள் அழுதுகொண்டு நின்றார்கள். இரண்டு கள்வரும் சிலுவையில் அறையப்பட்டு இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் யேசுவைப் பார்த்து ஏசுகிறான். மற்றவனோ தனது குற்றங்களுக்காகத் துக்கப்படுகிறான். "உம்முடைய இராச்சியத்தில் இருக்கும் பொழுது அடியேனையும் நினைந்தருளும்" என்று அவன் யேசுவுக்குச் சொன்னான். ஆண்டவர் அவனுக்கு மன்னிப்புக் கொடுத்து: "இன்றுதானே என்னுடன் மோட்சத்தில் இருப்பாய்" என்று சொன்னார். யேசு மூன்று மணித்தியாலம் சிலுவையிற் தொங்கியிருந்தார். அதன் பின் தலையைச் சாய்த்துத் தமது பிராணனை விட்டார்.

— மரியாயின்வருடத்தை ஞாபகப் படுத்தும்மெடல்கள் அடித்துக்கொடுப்பதை இத்தாலிய நாணயமடிக்குஞ் சாலையிடம் வத்திக்கான் ஒப்படைத்திருக்கிறது. இந்தமெடல்கள் ஓர்பக்கத்தில் அமலோற்பவமாதாவின் பிரதிமையையும், மறுபக்கத்தில் பரிசுத்தபிதாவின் பிரதிமையையும் கொண்டிருக்கும். ஒருதொகையான மெடல்கள் பொன், வெள்ளி, வெண்கலத்தில் அடிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வாரிமலைக் காட்சி

(ஜி. எஸ். நாயகம், ஸ்டேஷன்மாஸ்டர், கெம்பாஸ், மலாயா)

பலஸ்தீனுநாடு கிறீஸ்தவர்களாகிய சகலர்க்கும் ஓர்புண்ணிய பூமியாகும். ஏனெனில், இங்குதான் நரகத்தின் வாசல் அடைக்கப்பட்டது. மோட்சத்தின்வாசல் திறக்கப்பட்டது. மனித இரட்சணியசம்பவம் நிறைவேறியது. நமதுஆண்டவரின்காலத்திலே இந்த நாட்டுக்கு நடுநாயகமாய் விளங்கியது ஜெருசலேமாநகரம். இந்நகருக்கு ஓர் அணிகலமாய் விளங்கியது சலமோன்இராசாகட்டுவித்த தேவாலயம். இந்நகருக்குவெளியே சற்றுத்தூரத்தில் ஒருசிறுகுன்று. அதுதான் "கல்வாரிமலை." அந்நகரின் கொலைக்களம் அதுவே. ஆகவே, அதுஒரு பயங்கர தலமென்று சொல்லவும் வேண்டுமா? மனிதஇரட்சணியத்தின் பரமஇரகசியம் நிறைவேறியது இந்தமலைஉச்சியில்தான்.

இற்றைக்கு 1900 வருடங்களுக்கு முன் ஒருவெள்ளிக்கிழமைகாலை ஜெருசலேம்நகர்அளித்த கோரக்காட்சியை நினைக்கும்போது நெஞ்சம் திக்கிடும். தேகம்பதறும். ஆ! என்ன பயங்கர காட்சி! திரளானசனங்கள் கூட்டம் கூட்டமாய் நகரின் பலதிசைகளிலுமிருந்து சரிந்தவண்ணமிருந்தார்கள். வீதிகளிலும், மூலை முடக்குகளிலும் நிற்கமுதலாய் இடமில்லை. ஆண்களும் பெண்களும், முதியோரும் சிறியோரும் ஒருவர்மேல்ஒருவர் விழுந்தடித்துக்கொண்டு போனார்கள். அவர்கள் எல்லோரும் ஒரேஇலக்கைநோக்கியே சரிந்தார்கள். பலரும் தேவதூஷணங்கள்சொல்லி, சனங்களைக் கெடுத்த பாமவஞ்சகன் கடைசியாக நீதிவாய்ப்பட்டான்என்று பேசிக்கொண்டுசென்றார்கள். பிரதானஆசாரியரும், சனத்தின்மூப்பர்களும் கூட்டத்திற்குத் தலைமைவகித்து அங்குமிங்குமாகப் பரபரப்புடன்ஓடிச் சனங்களைவழிநடத்தினார்கள்.

இவர்களெல்லாம் பெரும் அட்டகாசத்தோடும், ஏதோபெரியவெற்றி ஈட்டியவர்களைப்போல் பெரிதும் ஆரவாரத்தோடும் செல்ல, செந்தூரியன் ஒருவன் குதிரைமீது முன்செல்ல, அவனுக்குப்பின் சிலுவைமரணப் பட்டையத்தாங்கியஒருவன்குற்றவாளியின் குற்றங்களைப் பறைசாற்றிக் கொண்டு போக, சிலுவையில் அறையப்படவேண்டிய இரண்டு கள்ளர் பின் தொடர்ந்துபோக, பாரச்சிலுவையைச் சுமந்தபடியே சர்வாங்கமும் இரத்தத்தால்தோய்ந்து சிரசில்முள்முடி தாங்கியவராய், நடக்கமுடியாது தள்ளாடித்தள்ளாடிக் கண்கொண்டு பார்க்கவியலாத பரிதாபகோலத்தோடு செல்லும் அந்தமனிதர்யார்? அவர்தான் சென்ற இடங்கள்தோறும் நன்மை செய்துகொண்டுபோன நசரேத்தூர் யேசு. தாவீதின்குமாரன். என்னே! ஆறுதினங்களின்முன் இந்தச்சனங்கள்தானே, இந்தவீதிவழியாகத்தானே, இவரைத்தானே ஓர் வெற்றிவேந்தரைப்போல் ஓர்வேசரிவாகனமீது அமரச்செய்து குருத்தோலைகளைக் காத்தேந்தி "ஓசன்னா"பாடி நிலபாவாடைமீது பவனிகொண்டு சென்றார்கள். திரும்ப அதேசனங்கள்தானே கள்ளன், கசடன், கலகக்காரன், குழப்பக்காரன்என்று குற்றம்பாரித்து: "அவரைச்சிலுவையில் அறையும் அறையும்" மென்று சலஞ்சாதித்து இரத்ததாகம் கொண்ட வேங்கைகள்போல அவரைப் பிறிக்கழித்து இவ்விதகோலத்துடன் கொலைப்படுத்துமாறு கபாலமலைஉச்சிக்குக் கொண்டுபோகிறார்கள். இதுதான் உலகம்!

இப்பொழுது கல்வாரிமலைமுழுவதும் தேங்கிவழிந்த சனத்திரளிலே இருவித மனோபாவம்அடங்கிய கூட்டம்இருந்தது. பரிதபிப்போரும், பரிகசிப்போரும், ஆம், அழுவோரும், சிரிப்போரும். முன்னர் வனாந்தரத்திலே இஸ்ராயேல்மக்கள்மத்தியில் இரட்சிப்புக்காக வெண்கலச்சர்ப்பம் உயர்த்தப்பட்டதல்லவா? அதேபோல இப்பொழுது மனுக்குலமீட்புக்காக ஒருசீவன் இன்னும்சிறிதுவேளையில் உயர்த்தப்படவிருக்கிறது. அங்கு வேடிக்கைபார்த்துக்களிக்கவே சனக்கூட்டத்தின் பெரும்பகுதி கலகலத்து மகிழ்ச்சியுடன் கலந்துநின்றது. சிறுபகுதி கண்ணீருவி தாங்கமாட்டாது கண் கலங்கி அழுதுகொண்டு தூரஒதுங்கிநின்றது. புதியஏற்பாட்டின் வெண்கலச்சர்ப்பமாகஉயர்த்தப்பட நமதுஆண்டவரும் தமதுசிலுவையோடு அங்கு ஆயத்தமாயிருந்தார். அவர் அந்தத் தண்டனையை மூன்று நியாயாசனத்தின் (அன்னாஸ், கைப்பாஸ், பிலாத்துஸ்) முன்நின்று ஏற்றார். வழக்காடவுமில்லை; வாய்திறக்கவுமில்லை. (மத். 12. 19)

இதோ நேரம்வந்துவிட்டது. திவ்வியயேசு சிலுவையில் அறையப்படுகிறார். சிலுவையோடு கல்வாரிமலையில் உயர்த்தப்படுகிறார். அங்கே தமது கடைசித்துளி இரத்தத்தையும் சிந்துகிறார். அன்றுகல்வாரியில் சிந்தப்பட்ட திருஉதிரம் அக்கூட்டத்தில்நின்ற அத்தனைஆயிரம்பேரிலும் இரண்டேஇரண்டுபேரையே குணப்படுத்தியது. அவர்கள்யார்? வலதுபக்கத்துக் கள்ளனும், செந்தூரியனும்தான். ஆம், அந்தக்கல்வாரிமலையிலுள்ள கல்லுகள் பெற்ற பாக்கியம்தன்னும் அங்குநின்ற மானிடக்கல்லுகளுக்கு இல்லை. அக்கற்களில் பாய்ந்தோடிய செந்நீர் அன்றும் இன்றும் என்றும் உலகமுடிவுபரியந்தம் பாய்ந்தோடியபடியே இருக்கும். இந்த இரத்தப்பலன் சகலமானிடர்க்கும் முன்பாகத் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. எவன் இதைப்பூச்சியமாக அள்ளித் தன்இருதயத்தில் பூசிக்கொள்ளுகிறானே அவனே பாக்கியவான்.

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! இவ்வருட ஆரம்பத்திலே கொழும்பு நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் அநேகமாணவர்கள்படிப்பதற்குப் பாடசாலைகளில் இடமின்றி வெளியேற்றப் பட்டமையைப் பலரும் நன்கறிவார்கள். ஆனால், இப்பகுதியிலோ படிக்க மாணவர்கள் இல்லாது புதியபுதிய பாடசாலைகளைச் சிருஷ்டித்த சிலர் அங்குமிங்குமாகக் கிராமங்கள்தோறும் சுற்றித்திரிந்து பிள்ளைகளைத் தேடி யலைவதிலே மிகுந்தகளை கொள்ளுகின்றனராம். இங்கே மைலுக்கொன்றுவீதம் குடிகளிருக்க, பாடசாலைகளோ சாணுக்கொன்றுவீதம் தலைகாட்டப் பார்க்கின்றனவாம். இவற்றிற்கென அள்ளி இறைக்கும் பணத்தை இந்நாட்டின் கொடையாகிய கட்டுக்கரைக்குளத் திருத்தத்திற்குச் செலவிட்டால் பெருந்தொகையான உழவர்களுக்குப் பேருதவியாயிருக்குமாம் உணவுவிருத்தியும், பொருளாதாரநிலையுமே இப்போது இங்கே முதலிடம்பெற வேண்டியிருக்க — இவைகளே அரசினரின் முக்கியலட்சியங்களாயிருக்க இங்குள்ள போலித்தொண்டர்கள் சிலரின் சூழ்ச்சிகளால் அனாவசியபணச் செல்வுகளும், கிராமமக்களிலே கட்சிப்பிளவுகளும் ஏற்பட்டுவருவது உண்மைப் பொதுநலப்பிரியர்களுக்குப் பெரிதும் மனவேதனையை உண்டாக்குந்தானும்.

பெரும்போகவேளாண்மை: இம்முறை காலமழை நன்றாகப் பெய்தமையாலே ஏராளமாக நெற்செய்கை நடைபெறலாயிற்று அதனால் அதிக வருமானம் ஈட்டலாமென உழவர்கள் பெரும்மனக்கோட்டைகள் கட்டியிருந்தார்களாம். ஆனால், பலகிராமங்களிலே கருமம் பிரதிகூலமாக முடிந்திருக்கிறதாம். நோய்காரணமாகப் பெருந்தொகையானவயல்கள் தகுந்தபலன் அளிக்கவில்லையாம். இனி [illegible] கால ஆரம்பத்தில் பெருமழை வருஷித்தபடியால் வயல்கள் வெள்ளக்காடாகிப் பயிர்கள் சிதைவுற்றுக் காணப்படுகின்றதாம்.

ஐக்கியசங்கங்கள்: மக்களிடையே ஐக்கியத்தைஉண்டாக்கி அதனால் நாட்டிலே பொருளாதாரநிலையை விருத்தியாக்கவேண்டுமென்னும் நல்லநோக்கம்கொண்டுதான் அரசினர் ஐக்கிய சங்கங்களை ஆங்காங்கு அதிகமாக ஸ்தாபித்தனராம். ஆனால், நிலைமையோ இப்போது உத்தியோகப்பெருமை அவாவைப் பலரிடத்தும் எழுப்பிவிட்டுக் கட்சிப்பிளவுகளையும், கலவரங்களையும் உண்டாக்கி விட்டிருக்கிறதாம் சுயநலப்புலிகள் சுளியோடித் திரிகிறவரையிலே எதுவித பொதுநலன்களும் உண்டாகப்போவதுமில்லையாம். நாடு நல்லமுன்னேற்றம் அடையப்போவதில்லையாம்.

கைலஞ்ச ஊழல்: இந்த மகாபாதகம் நாட்டில்பாவி நாசம்விளைக்காது அரசினர் எவ்வளவோ பாதுகாப்புநடவடிக்கைகளை எடுத்துவந்தபோதிலும் இந்தப்பெரும்பாதகம் இலைமனநாய்போல் இருந்து, தனது திருவிளையாடலைச் செய்யாதுவிடவில்லையாம். இது பல ஸ்தாபனங்களிலும், கட்டுக்கரைக் குளத்திலிருந்து கமநிலங்களுக்குஓடும் தண்ணீரிலும் அதிகமாகக் கலந்து தனதுதொழிலை மும்முரமாகச்செய்து ஏழைகளைப் பெரிதும் இம்சித்து வருகின்றதாம். இந்தத் தொற்றுநோய் எப்போதுதொலையுமோ அப்போதே நன்மைபெற்று நாடுவாழுமாம்.

## நீடித்த உண்ணவிரதம்

சீவபரியந்த சிறைத்தண்டனைபெற்று இந்தியாவிலே ஜொட்பூர் சிறைச்சாலையில் இருந்துவருகின்ற குற்றவாளிஒருவர் சிறைச்சாலைக் காவலர்களுக்குக் கூடினசம்பளம் கொடுக்கப்படுகிறவரையிலே தான்உண்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று உண்ணாவிரதம் அனுட்டித்துவருகின்றார். இந்தஉண்ணாவிரதம் இன்றுநேற்றுத் தொடங்கியதல்ல. சென்ற 1953-ம்ஆண்டு பங்குனிமாதம் 10-ந்திகதி ஆரம்பமானது. இவர் தனதுவிரதத்தை நிறுத்தாததால் ஆங்குள்ள ஆஸ்பத்திரிஒன்றுக்குக் கொண்டுபோகப்பட்டார். அங்கே இவர் சிறைச்சாலைக் காவலர்களால் செயற்கைமுறையாக அடிக்கடி உணவூட்டப்படுகின்றார். அங்கே இவருடைய சீவனைக் காத்துவைக்க ஆனபிரயாசையெல்லாம் எடுக்கப்பட்டுவருகிறது. உலகில் அதிககாலம் உண்ணாவிரதம் அனுட்டித்துள்ளவீன் இவரேயாம்.

## அர்ச். அந்தோனியார்திருநாள் கச்சதீவு

நெடுந்தீவு விசாரணைப்பங்கைச் சேர்ந்த கச்சதீவு அர்ச். அந்தோனியார்திருநாள் கடந்த 28-3-54 ஞாயிற்றுக்கிழமை அதிபக்தியருட்சிக்குரிய விதமாய்க் கொண்டாடப்படலாயிற்று. திருநாளுக்கு முந்திய திரிதினஆராதனைகளிலும் அலைகடலுக்கும்அஞ்சாது என்றுமில்லா ஆர்வமுடன் வந்துகுழுமிய ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் பங்குபற்றினார்கள். நெடுந்தீவுக்கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. சுவாமிபிள்ளை சுவாமி அவர்களால் திருநாளன்று நிறைவேறிய திவ்வியபாடற்பூசையிலே பெருந்திரளானோர் திருவிருந்தருந்தினர். அர்ச். அந்தோனியாரைக்குறித்து அவர்பொழிந்த நளிய அமிர்தமானபிரசங்கம் எந்தக்கலலையும் கனியாக்க வல்லதாயிருந்தது. சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே நிறைவேறிற்று. குறைவற்ற வரமருளுங் கோடியற்புதரின் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

— நிருபர்

## கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞானஒடுக்கம்

### 24-4-54 — 28-4-54

இவ்வருடம் சித்திரைமாதம் 24-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கமானது இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் வழமைப்பிரகாரம் ஆரம்பமாகும். மரியாயின்வருடத்தின் ஞாபகத்தை ஆசிரியைகளின்மத்தியில் நிலைநாட்டும் நோக்கமாக முடிவுதினமாகிய 28-ந் திகதி காலை படிப்பித்தல்உபகரணக் காட்சிவிழாஒன்றுதிறந்துவைக்கப்படும். சாயந்தரம் தோட்டஉபசாரணையுடனும், மாணவரது சங்கீதக்கச்சேரியுடனும் விழாமுடிவடையும். பங்குபற்றுவோர் ஏலவே அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

Revd. Mother Superior,
Holy Family Convent,
Ilavalai.

கவனிப்பு:

மரியாயின் வருடத்தில் அதிகமானோர் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கின்றோம். ஆங்கில ஆசிரியைகளுக்கும் இந்த ஞானஒடுக்கத்தில் பங்குண்டென்பதை நினைவூட்டுகிறோம்.

A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 10-3-54.

## வானொலியில்

"மூன்று மணிநேரத் தியானம்"

பெரியவெள்ளிக்கிழமை (16-4-54) மாலை 1 மணிதொடக்கம் 4 மணிவரை இலங்கை வானொலியிலே எமது திவ்வியகர்த்தராகிய யேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் வசனித்த ஏழுவாக்கியங்கள்பற்றிய பிரசங்கம் வண. சற. என். குருஸ் சுவாமிகளால் தமிழிலே ஒலிபரப்பப்படும். மேட்டுத்தெரு அர்ச். அன்னம்மாள் பாடசாலை மாணவிகள் இதில் பங்குபற்றுவார்கள். கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடத்து மாணவிகள் கீர்த்தனைகள்பாடுவார்கள்.

வண. எம். முத்துப்பிள்ளை சுவாமியார்,
கொட்டாஞ்சேனை.

## பரிதாப மரணம்

அரிப்புக் கிராமவாசரும், பலராலும் நன்கறியப்பெற்றவரும், பரிசுத்தசெங்கோல்மாதா கோவிலைச் சேர்ந்தவருமான அலெக்சாந்தர் சந்தியாகு சம்பூரணம்கூஞ்ஞ என்பவரும், அரசாங்க ஆயத்துறை வள்ளத்தில் பலஆண்டுகளாகக் கடமைபார்த்து வருகிறவரான செபஸ்தியான் பிச்சைஎன்பவரும், மற்றும்ஓர்இந்தியரும் ஆயத்துறைவள்ளத்திலே நிற்கும்போது, இடியொன்றினால் மூவருமே தாக்குண்டதில் சம்பூரணம்கூஞ்ஞஎன்பவர் உடனேதானே மரணமாயினர். ஏனைய இருவரும் குற்றுயிரானநிலைமையில் இருந்தனர். அவ்வேளை ஒருவர்அங்குபோய்ப்பார்த்தபோது, மரணமடைந்தவர் தரித்திருந்த உடையிலே தீப்பற்றிஎரிவதைக்கண்டு, தீயைஅணைத்துவிட்டு மற்றவர்களுக்கு இதுசெய்தியை அறிவித்தார். அவர்கள்சென்று இறந்தவரின்பிரேதத்தை வீடுகொண்டுபோய்ச் சேர்த்தார்கள். ஏனையஇருவரும் சிலாபத்துறை ஆஸ்பத்திரிகொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள். சம்பூரணம்கூஞ்ஞவின் எதிர்பாராத மரணத்தையிட்டு ஆற்றொணாத்துன்புறும் பெற்றோர், மனைவி, மகள் ஆதியோருடன் நானும் அனுதாபப்படுகின்றேன்.

R. I. P. — நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## வெங்காயம் அறுவடையாகிறது

யாழ்ப்பாணப்பகுதியிலே இரண்டாயிரம்ஏக்கர்நிலத்தில் தற்போது வெங்காய அறுவடை நடைபெறுகிறது. அதனால்விரைவிலே எண்ணூயிரம் தொன் வெங்காயம் சந்தைகளிலே விற்பனைக்குவருமென எதிர்பார்க்கப் படுகிறது. இந்தவெங்காயம் யாழ்ப்பாணத்தின் வெங்காயத் தேவையை வருகிற ஆடிமாதம்வரையிலே பூர்த்தி செய்யப்போதுமானது. இப்போது யாழ்ப்பாணத்திலே ஒருஅந்தர்வெங்காயம் 27 ரூபா 50 சதமுதல் 30 ரூபா வரையில் விலைப்படுகிறது. அரசாங்கம் விதித்துள்ள தற்போதைய உத்தரவாத விலை அந்தருக்கு 24 ரூபா 60 சதமாகும்.

## பிரதமரின் நன்மதி

முந்தியமுந்திய காலங்களிலே ஆங்கிலக்கல்வியின்நோக்கம், அரசாங்க உத்தியோகம்ஒன்றைப் பெறுவதேயாகும்; ஆனால், இந்தக்காலத்தில் அப்படியில்லை என்பதைப் பெற்றார் மனதிற்கொள்ள வேண்டும்; தற்போது 15 லட்சம் பிள்ளைகளுக்குமேல் கல்விகற்கிறார்கள்; இவர்களுக்கெல்லாம் அரசாங்கத்திலே உத்தியோகம் கொடுப்பது முற்றுமே இயலாக்காரியமாகும்; அதனால் அரசாங்கசேவையைவிட வேறோர்முயற்சியைத் தேடிக்கொள்வதற்குத் தங்கள் கல்வியை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று மஹாறகாமத்து வித்தியாகரவித்தியாலய ரசாயனஆராய்ச்சிச் சாலையைப் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் சென்றவியாழக்கிழமை திறந்துவைத்துப் பேசியபோது கூறலாயினர்.

## அப்படிச் சொல்லவில்லையாம்

"நான் அதிகாரத்துக்குவந்தால் அப்போது புத்தசமயத்தை அரசாங்க மதமாகவோ, அல்லது சிங்களத்தை மாத்திரம் அரசாங்கமொழியாகவோ ஆக்குவேன்என்று ஒருபோதும்நான் சொன்னதேயில்லை; தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளுமே அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டும்" என்று பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவருமான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக சென்ற 3-ந் திகதியன்று கல்முனையில் நடைபெற்ற ஓர்பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கின்றார். தற்போது இவரும், இவரைச் சேர்ந்த எம். பி. ஒருவரும் தற்போது சுதந்திரக்கட்சிக் கொள்கைகளைப் பிரசாரஞ்செய்துகொண்டு கிழக்குமாகாணத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்து வருகின்றார்கள்.

## பாடசாலைகளும் கமத்தொழிலும்

உணவுச் செய்கை இயக்கத்திலே பாடசாலைகள் மேலும்தீவிரமாக ஈடுபடத்தக்கதாய் அரசாங்கஉணவுப்பகுதி சமீபத்தில் ஏறக்குறைய நான்குலட்சம் ரூபாபெறுமதியான மண்வெட்டிகள், வாளிகள், நீர்வார்க்கும்வாளிகள், மண்தோண்டும் முட்கள்ஆகியாம் கமத்தொழில் உபகரணங்களைப் பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்கவிருக்கின்றது. எங்கெங்கு பாடசாலைகளுக்கு அரசாங்ககாணிகள் ஒதுக்கப்படமுடியுமோ அங்கங்கெல்லாம் அதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு அரசாங்கஏசன்றர்களுக்குக் காணிக்கம்மிஷனர் ஆலோசனை கூறியிருக்கின்றார். உணவுச் செய்கையிலே ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்தும் நோக்கமாக விளைவிக்கப்படும் உணவுப்பொருட்களில் அரைவாசி அவர்களுக்கும், கால்வாசி ஆசிரியர்களுக்கும் கொடுபடவேண்டுமென உணவுப்பகுதி தெரிவித்திருக்கிறது. மீதியான கால்வாசியும் விற்பனைசெய்து ஓர் மத்திய நிதியில் சேர்க்கப்படும்.

## பிரதமரும் கம்யூனிஸ்தகட்சியும்

வெலிகாமத்திலே ஐக்கியதேசியகட்சிப் பிரசாரகூட்டம்ஒன்றில் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் சென்றவாரம் பேசியபோது: திரு. பண்டாரநாயகவின் கட்சியையிட்டோ, அல்லது டக்றர் என். எம். பெறேராவின் கட்சியையிட்டோ கிஞ்சித்தேனும் நான் அஞ்சவில்லை; ஆனால், கம்யூனிஸ்தகட்சியையிட்டுத்தான் நான் அஞ்சுகிறேன்; கம்யூனிஸ்தகட்சியையிட்டுத்தான் அஞ்சுகிறேன் என்று சொல்லும்போது நான் கருதுவதென்ன? இந்தக்கட்சி ரூஷியாவிலிருந்து பெருந்தொகையானபணத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலைமையில் இருக்கிறதென்பதும், தங்கள்சொந்த நாட்டுக்கே துரோகிகளாகும்படி நமது சொந்தமக்களைக் கைலஞ்சம்கொடுத்து ஏமாற்றி மோசஞ்செய்துவருகிறது என்பதுமே; சமீபத்திலே நாடுகடத்தப்பட்ட திருமதி டி ஹென்றிஎனும் கம்யூனிஸ்தபெண் இந்த நாட்டுக்கு ஐந்துலட்சம்ரூபா கொண்டுவந்திருக்கிறாள் எனக்கூறலாயினர்.

---


## விற்பனைக்கு !

பெரிய வெள்ளிக்கிழமை
திருச்சிலுவை ஆராதனைவேளையில்
பாடத்தகும்
**பிரலாபக் கண்ணிகள்**

**100 பிரதிகள் : விலை ரூபா 3-00**

தபாற்செலவு பிரத்தியேகம்

* * *

பசாம்புத்தகம் 1-50
(தபாற்செலவு) -16

முற்பணம் கட்டவேண்டும்

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்


---

அர்ச்சியசிஷ்ட
அந்தோனியாரின்
தருமக்கோணம்

சேன் வின்சென்ற் டி போல்
தருமசபை
யாழ்ப்பாணம்



கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

பாஷையூர்: தவிதுவலோரியான் 3-50, மூப்பர்பெண் லேனு 2-00, அன்ரன்பேக்கரி 2-00—நெடுந்தீவு: சீமான்யோசேப்பு 52-00—சூராவத்தை: எஸ். ஆசீர்வாதம் 3-00, பி. ஏ. இராசரட்ணம் 6-00, ஆர். கத்தரீனம்மா 3-00 — உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 6-00—இற்றூலை: மிசெஸ் பிறூங் அன்ரன் 8-00 — அக்கரபத்தன: இ. எம். டயஸ் 2-00—சிங்கப்பூர்: ஏ. எம். பெஞ்சமின் 40-00 — வெலிகன்ன: பி. பி. இராசமணிநாடார் 35-00 — இறம்பைக்குளம்: பி. எஸ். வஸ்தியாம்பிள்ளை 6-00 — தலைவில்லு: அன்ரன் லீயோ 10-00—வட்டவளை: எஸ். ஜோண் 10-00, டி. அந்தோனி குருஸ் 2-00 — நாத்தாண்டி: வி. டி பி. பெறேரா 2-00 — வவுனியா: பி. ஜே. சிறில் 3-00 — உடப்புவா: பி. பேதுரு பெர்னாண்டோ 2-00—அக்கரபத்தன: எல். ஏ. எஸ். தோமஸ் 4-00—மாம்புரி: பிறூங் எல். லீயோ 3-00, வி. சலமோன் 2-00 -- முள்ளிக்குளம்: மனுவேல் மரியகூஞ்ஞ 2-00, ஏ. சிமியோன் லெம்பேட் 2-00, மிசெஸ் பிரான்சீஸ் குருஸ் 1-00—கொச்சிக்கடை: இஸ் மேரியாப்பீரிஸ் 2-00 — கொஸ்லான்ட்: எஸ். கே. எம். டி. பிள்ளை 10-00 — கொள்ளுப்பிட்டி: ஜி. சன்ரியாகோ 3-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 6-50 — செட்டிகுளம்: டி. வஸ்தியாம்பிள்ளை 2-00, ஜே. இராயப்பு 15-00, வி. சவிரிமுத்து 10-00 — [illegible] ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00 — ஓமந்தை: பி. ஜே. சிறில் 2-00—டொன்கொற்றுவர்: எம். எம். கோமஸ் 5-00 — கேகாலை: ஏ. யுவக்கிம் 10-00, எஸ். எஸ். டானியேல் 3-00—கற்றன்: அரியரலவா 6-00—மலாயா: எஸ். யோசேப்பு 13-25, எஸ். பிரான்சீஸ் 6-62 — மொனறகல: ஆர். தொம்மான் 2-50, கே. எம். சந்தனம் 2-50 — தலவாக்கொலை: எஸ். எ. மத்தியூ 30-00—பண்டாரவளை: ஜே. அந்தோனியம்மாள் 2-00 — மஸ்கேலியா: நாராயணன் முனிஅம்மா 3-00, ஆர். பெரியசாமி 10-00, பி. கபிரிகேற்பிள்ளை 2-00 — கொக்கில்லாம்: எம். மரியாம்பிள்ளை 24-50—நுவரேலியா: ஜே. மார்க்டானியல் 2-00 — டொலோஸ்வொக்கி: ஜோண் பெறேரு 5-00 — வங்காலை: வி. யோசேப் குருஸ் 5-00 — குடுவெந்தபுலம்: பி. சந்தியாப்பிள்ளை 6-50—நாரந்தனை: எஸ். ஏ. நல்லையா 1-00—முருங்கல்: எம். அந்தோனிப்பிள்ளை 3-00 — யாழ்ப்பாணம்: ஜே. மனுவேற்பிள்ளை 1-00, வி. குருசுமுத்து 2-00, ஏ. பிரான்சீஸ்பிள்ளை 2-00, பி. எஸ். பஸ்ரியாம்பிள்ளை 20-00, பி. சி. பொன்னையா 2-00, இ. ஆர். 2-00, பி. எஸ். ரி. 5-00, ஏ. பிரான்சீஸ்கம்மா 1-00—கல்கமுவா: எம். சந்தியாப்பிள்ளை 2-50, ஏ. மரியானாள் 2-00, எஸ். மரியாம்பிள்ளை 2-50, ஏ, லியோனிசுயுஸ் 3-00, பி. நீக்கிலாஸ் 2-50 — கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 5-00 — அப்புத்தளை: எஸ். எம். யோசேப்பு 20-00 — கொக்கிளாய்: ஏ. அன்னம்மா 2-00 — நரக்களி: எம். சுவக்கீம் 4-00 — சில்லாலை: எம். ஜே. மரியநாயகம் 2-00 — வெலிகன: எஸ். கயித்தான் நாடார் 5-00 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 2-00, பி. கபிரிகேற்பிள்ளை 2-00, திமிங்குப்பிள்ளை றோசம்மா 2-00—நாவற்காடு: ஏ. எபிரேம்பிள்ளை 4-00, எஸ். அந்தோனிப்பிள்ளை 5-00, ஏ. எலோனியா 2-00, இ. எம். சூசை 5-00, எஸ். தோமஸ் 5-00 — அரிப்பு: கே. ஞானம்மா குருஸ் 10-00—தெய்யப்பிட்டி: மிசெஸ் ஏ. வி. பெர்னாண்டோ 13-00 — கல்லில்லா: ஏ. எல். சைமன் 10-00, பிறூங் அன்ரன் 4-00—நாவற்குளி: ரி வில்லியம் 2-00—யாழ்ப்பாணம்: யோசேப்பு 1-00 — மன்னார்: எம். பிலோமினா 2-00.

| | |
|---|---|
| The Director,<br>St. Joseph's<br>Conference.<br>Bishop's House,<br>JAFFNA. | சேன் வின்சென்ற் டி<br>போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன<br>மாளிகை<br>யாழ்ப்பாணம். |

---




# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப் படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானால், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

**சிலோன் இன்ஷூரன்ஸ்**
**கம்பெனி லிமிட்டெட்,**

தலைமை ஆபீஸ் :
**69, இராணி வீதி — கொழும்பு.**

Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo


---

## நன்றித் துதி

திருஇருதய இராசாவின் இரக்கத்தாலும், எங்கள் அன்பார்ந்த அன்னை சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், கோடியற்புதரான அர்ச். அந்தோனியார் இவர்களின் இரக்கமுள்ள பாதுகாவலாலும் எங்கள் மகள் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தி அடைந்ததற்காக எங்கள் மனமார்ந்த நன்றி. மேலும் எங்கள் ஏனைய மன்றாட்டுகளையும் திருஇருதய ஆண்டவரிடமிருந்து பெற்றுத் தருவார்களாக.

Lunugala. P. S.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 8-1954

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org